அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

## 44 - இஸ்லாம்

## புள்ளியிடும் திட்டம்




இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

Department of Examinations - Sri Lanka

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2021 (2022)

## 44 - இஸ்லாம்

## புள்ளியிடும் திட்டம்

பரீட்சார்த்திகள் இவ்வினாத்தாளில் உள்ள பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

**பகுதி I**

02 வினாக்களுக்கும் - 02 x 20 = 40 புள்ளிகள்

**பகுதி II**

03 வினாக்களுக்கும் - 03 x 20 = 60 புள்ளிகள்

**மொத்தம்**

05 வினாக்களுக்கும் - 40 + 60 = 100 புள்ளிகள்

**இறுதிப் புள்ளி கணித்தல் : பத்திரம் I = 50 புள்ளிகள்**

**பத்திரம் II = 100 புள்ளிகள்**

$$= 50 + \left[\frac{100}{2}\right] = 100 \text{ புள்ளிகள்}$$

Department of Examinations - Sri Lanka

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**




(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

Department of Examinations - Sri Lanka

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

Department of Examinations - Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

ඉස්ලාම් I
இஸ்லாம் I
Islam I

44 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

- ※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி** (X) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** அல்லாஹ் மனித குலத்துக்கு வழிகாட்டுவதற்காக வேதங்களை அருளினான். அவற்றுள் ஸபூர் வேதம் அருளப்பட்ட நபி
(1) ஈஸா (அலை) ஆவார். (2) மூஸா (அலை) ஆவார.
(3) இப்ராஹீம் (அலை) ஆவார். (4) நூஹ் (அலை) ஆவார்.
(5) தாவூத் (அலை) ஆவார்.

**2.** நபி (ஸல்) அவர்களுக்கு அல் - குர்ஆன் அருளப்பட்ட நூற்றாண்டு
(1) கி. பி. 6 (2) கி. பி. 7 (3) கி. பி. 9 (4) கி. பி. 11 (5) கி. பி. 12

**3.** "பாவத்தில் வீழ்ந்து விடுவோம் என்னும் அச்சத்தினால் ஒரு பாவமில்லாத விடயத்தைக் கூட கைவிட முன்வராதவரை, இறைவனை அஞ்சும் நல்லோர்களின் பட்டியலில் எந்த மனிதனும் இடம்பெற முடியாது." எனும் நபிமொழி மூலம் வலியுறுத்தப்படுவது
(1) தவக்குல் (2) மஹப்பத் (3) ரிழா (4) வர.: (5) தௌபா

**4.** நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சிறு பராயத்தில் பாலூட்டிய ஹலீமா அம்மையார் அவர்கள்
(1) பனூஹாஷிம் கோத்திரத்தைச் சேர்ந்தவராவார்.
(2) குழாஆ கோத்திரத்தைச் சேர்ந்தவராவார்.
(3) பனூ முத்தலிப் வம்சத்தைச் சேர்ந்தவராவார்.
(4) ஸஃது பின் பக்ர் கிளையைச் சேர்ந்தவராவார்.
(5) நபி(ஸல்) அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவராவார்.

**5.** "மனிதர்கள் அனைவரும் அல்லாஹ்வின் குடும்பமாகும். அக்குடும்பத்துக்கு மிகவும் பயனுள்ளவர்களே அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பத்துக்குரியவர்களாவர்." என்பது
(1) நபி (ஸல்) அவர்களது ஹதீதாகும். (2) அல் - குர்ஆன் வசனமாகும்.
(3) அலி (ரழி) அவர்களின் கூற்றாகும். (4) இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் போதனையாகும்.
(5) நவீன கால அறிஞர் ஒருவரின் கருத்தாகும்.

**6.** "உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலப்பகுதியில்தான் இலங்கையில் இஸ்லாம் அறிமுகமானது." என்ற கருத்தை முன்வைத்தவர் யார்?
(1) இப்னு பதூதா (2) இப்னு ஷஹ்ரயார் (3) தொலமி
(4) மார்சல் புரும்ஹால் (5) கலாநிதி ஹமீதுல்லாஹ்

**7.** தாபிஈன்கள் காலத்து அறிஞர்களது ஹதீஸ் தொகுப்புக்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?
(1) முஸன்னப் (2) ஜாமிஉ (3) முஸ்னத் (4) கிதாப் (5) ஸுனன்

Department of Examinations - Sri Lanka

**8.** ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட ஒரு விடயத்தை தொடர்ந்தும் அதே நிலைப்பாட்டில் வைத்திருப்பதை இஸ்லாமிய பரிபாஷையில்
(1) இஸ்திஸ்லாஹ் எனப்படும். (2) ஷர.்: ஸாபிக் எனப்படும்.
(3) கியாஸ் ஹபி எனப்படும். (4) இஸ்திஸ்ஹாப் எனப்படும்.
(5) இஸ்திஹ்ஸான் எனப்படும்.

**9.** மத்திய ஆசியாவில் தோற்றம் பெற்ற 'நக்ஷபந்தியா' தரீக்காவின் ஸ்தாபகர்
(1) செய்யித் அஹ்மத் ஷரீப் (ரஹ்) ஆவார்.
(2) காதி முஹம்மத் (ரஹ்) ஆவார்.
(3) அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) ஆவார்.
(4) ஹாஜா முஈனுத்தீன் (ரஹ்) ஆவார்.
(5) அபூஹாமித் அல்கஸ்ஸாலி (ரஹ்) ஆவார்.

**10.** 'மஹ்ரம் முஅப்பத்' எனும் பதம் குறித்து நிற்பது
(1) நிரந்தரமாக திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாதவர்களை ஆகும்.
(2) தற்காலிகமாக திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாதவர்களை ஆகும்.
(3) திருமணத்தின் போது 'வலி'யாக நிற்பதற்கு அனுமதிக்கப்படாதவர்களை ஆகும்.
(4) நிரந்தரமாக திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டவர்களை ஆகும்.
(5) இறந்தவரின் சொத்தில் பங்குபெற அனுமதிக்கப்பட்டவர்களை ஆகும்.

**11.** தனது கணவர் தனக்கு செலவு செய்யும் விடயத்தில் கஞ்சத்தனம் காட்டுவதாக நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்ட பெண்மணி
(1) ஹன்ஸா (2) ஸல்மா பின்த் ஸகர் (3) ஸபிய்யா
(4) உம்முஜமீல் (5) ஹின்தா

**12.** 'பர்ளு, நபில்' ஆகிய சொற்களின் கருத்துக்கள் முறையே
(1) அனுமதிக்கப்பட்டவை, தடுக்கப்பட்டவை
(2) விரும்பத்தக்கவை, வெறுக்கத்தக்கவை
(3) பின்பற்றத்தக்கவை, ஏற்றுக்கொள்ளத்தக்கவை
(4) அனுமதிக்கத்தக்கவை, ஊக்கப்படுத்தப்பட்டவை
(5) கடமையாக்கப்பட்டவை, ஆர்வமூட்டப்பட்டவை

**13.** ஸகாத்தை சேகரித்து விநியோகிக்கும் பணியில் ஈடுபடுவோர் எவ்வாறு அழைக்கப்படுவர்?
(1) பகீர் (2) மிஸ்கீன் (3) ஆமில்
(4) முஅல்லபதுல் குலூப் (5) இப்னு ஸபீல்

**14.** அல் - குர்ஆன், ஸுன்னாவில் பங்குகள் மிகத்தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டுள்ள வாரிசுகளான 'அஸ்ஹாபுல் புரூள்' எனும் பிரிவில் **உள்ளடக்கப்படாதவர்**
(1) கணவன் (2) மனைவி (3) மகனின் மகன் (4) தாய் (5) தந்தை

**15.** நபி (ஸல்) அவர்களின் தூதுவராக வந்த 'வஹப் இப்னு அபீஹப்ஸா' எனும் ஸஹாபி இலங்கையைத் தரிசிப்பதற்கு முன்னர் சென்ற நாடு
(1) யமன் (2) சூடான் (3) இந்தோனேசியா (4) சீனா (5) சுமாத்ரா

**16.** இஸ்லாத்தின் துணை மூலாதாரங்களுள் 'மஸ்லஹா முர்ஸலா' என்பது
(1) ஏகோபித்த முடிவாகும். (2) மனித நலன் காப்பதாகும்.
(3) சிறந்ததென காணலாகும். (4) வழக்காறுகளாகும்.
(5) ஒப்பு நோக்குதலாகும்.

**17.** இஸ்லாமியத் திருமணத்தில் 'வலி' எனப்படுபவர்
(1) திருமணத்தை இஸ்லாமிய முறைப்படி நடாத்துபவர்
(2) திருமணத்தின் போது சாட்சியாக நிற்பவர்
(3) மணப்பெண்ணின் மஹ்ரமியான உறவினர்
(4) மணப்பெண்ணுக்கு பொறுப்பாக நிற்பவர்
(5) திருமணத்தைப் பதிவு செய்பவர்



Department of Examinations - Sri Lanka

**18.** ஹதீஸ் கலையில் 'மக்தூ.'.' என அழைக்கப்படுவது, அறிவிப்பாளர் வரிசை
(1) தாபிஈன்கள் வரை செல்லும் ஹதீஸ்களையாகும்.
(2) ஸஹாபி வரை செல்லும் ஹதீஸ்களையாகும்.
(3) மறதியாளர் ஒருவரைக் கொண்டிருத்தலாகும்.
(4) தொடரில் ஒருவர் விடுபட்டிருத்தலாகும்.
(5) குறை சுமத்தப்பட்ட ஒருவரைக் கொண்டிருத்தலாகும்.

**19.** சமகாலத்தில் வாழ்கின்ற முஜ்தஹிதுகள் ஒவ்வொருவரும் குறிப்பிட்டதொரு விடயத்தில் தமது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்துவதோடு ஒருமித்த முடிவொன்றுக்கு இணங்குதல்
(1) இஜ்மாஉ ஸஹாபா ஆகும். (2) இஜ்மாஉ ஸரீஹ் ஆகும்.
(3) இஜ்மாஉ முரக்கப் ஆகும். (4) இஜ்மாஉ அக்ஸரிய்யா ஆகும்.
(5) இஜ்மாஉ ஸுகூதி ஆகும்.

**20.** குர்ஆனியக் கலையில் 'முஹ்கம்' எனப்படுவது
(1) குறித்ததொரு கருத்தை மட்டும் சுட்டும் தெளிவான வசனங்களாகும்.
(2) பொருள் தெளிவற்ற வசனங்களாகும்.
(3) அல் - குர்ஆனில் அத்தியாயங்களின் ஆரம்பத்தில் இடம்பெற்றுள்ள தனி எழுத்துக்களாகும்.
(4) அகீதா தொடர்பான வசனங்களாகும்.
(5) அல் - குர்ஆனில் மாற்றப்பட்ட வசனங்களாகும்.

**21.** "உனக்கு கவர்னரின் மகன் எவ்வாறு அறைந்தாரோ அவ்வாறே அவரது கன்னத்திலும் அறைந்து விடு." எனும் கலீபா உமர் (ரழி) அவர்களின் கூற்றுடன் தொடர்புடைய கவர்னர்
(1) அம்ருப்னு ஆஸ் (2) மூஸா பின் நுஸைர் (3) உக்பத் இப்னு நாபி.'.
(4) முஆத் இப்னு ஜபல் (5) அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம்

**22.** இஸ்லாத்தில் திருமண வைபவம் ஒன்றை நடாத்தும் போது தவிர்க்க வேண்டியதொரு செயல்
(1) கணவன் விருந்துபசாரம் ஒன்றை ஏற்பாடு செய்து திருமணத்தை பகிரங்கப்படுத்தல்.
(2) குறித்த பிரார்த்தனை மூலம் புதுத் தம்பதியினருக்கு வாழ்த்துத் தெரிவித்தல்.
(3) ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட மஹர் தொகையை மணமகளின் பொறுப்பாளரிடம் கையளித்தல்.
(4) அணிகலன்கள், விலையுயர்ந்த ஆடைகளை அணிவித்து மணப்பெண்ணைக் காட்சிப்படுத்தல்.
(5) அரச விவாகப் பதிவாளர் ஒருவரை அழைத்து திருமணத்தைப் பதிவு செய்தல்.

**23.** "அல் - அம்ரு பில் ம.'.ரூப் வன்னஹ்யு அனில் முன்கர்" என்பது
(1) நல்லவர்களை நண்பர்களாக்குவதும் தீயவர்களை புறக்கணிப்பதுமாகும்.
(2) நன்மையை ஏவுவதும் தீமையைத் தடுத்தலுமாகும்.
(3) இஸ்லாமிய வழியில் குடும்பத்தை வழிநடத்தலாகும்.
(4) அனைவரையும் சகோதரர்களாக ஏற்றுக்கொள்ளலாகும்.
(5) சமூகங்களுக்கிடையில் நல்லுறவைப் பேணுவதாகும்.

**24.** கணவன் நிறைவேற்ற வேண்டிய கடமைகளுள் **அடங்காதது**
(1) மனைவியின் தாபரிப்பை மேற்கொள்ளுதல்
(2) மனைவியைப் பாதுகாத்தல்
(3) மார்க்கக் கடமைகளை நிறைவேற்ற உதவியாக இருத்தல்
(4) மனைவியின் குடும்பத்தவர்களுக்கு தொடர்ந்து உணவளித்தல்
(5) மனைவிக்குரிய மஹரை ஒப்படைத்தல்

**25.** இலங்கையில் 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து மரணித்த காலித் இப்னு அபீபகாயாவின் கல்லறை நடுக்கல்லை ஆய்வுக்குட்படுத்தியவர்
(1) ஜேம்ஸ் டெனன்ட் ஆவார். (2) எஸ். பரணவிதான ஆவார்.
(3) பேராசிரியர் சாமுவேல் லீ ஆவார். (4) கலாநிதி வஸன்தரா மோகன ஆவார்.
(5) கலாநிதி சுக்ரி ஆவார்.

Department of Examinations - Sri Lanka

**26.** "தனி நபர்களின் சமூக உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பது அரசின் கடமையாகும்." என்பதை உறுதிப்படுத்துவதற்காக கலீபா உமர் (ரழி) அவர்கள் மேற்கொண்ட செயற்பாடு யாது?

(1) கனீமத் பொருட்களில் 'ஹுமுஸ்' எனப்படும் அரசின் பங்கினை யுத்தத்தில் அர்ப்பணிப்புடன் பங்கேற்காத வறிய மக்களுக்குப் பகிர்ந்தளித்தமை.
(2) ஒரு திம்மிக் கிழவரின் ஜிஸ்யா வரியை நீக்கிவிட்டு அவருக்கான பராமரிப்புச் செலவை முஸ்லிம்களின் பைத்துல் மாலிலிருந்து செலுத்தியமை.
(3) திறைசேரி அமைந்திருப்பது செல்வத்தை நிறைத்து வைப்பதற்கல்ல. மாறாக சமூக நலப்பணிகளில் செலவு செய்வதற்கே எனப் பிரகடனப்படுத்தியமை.
(4) "செல்வந்தர்களிடமிருக்கும் மேலதிகமான செல்வத்தைப் பெற்று ஏழைகளுக்கு பகிர்ந்தளிப்பேன்." என பிரகடனம் செய்தமை.
(5) ஏழைகள் பட்டினியால் வாடவோ, ஆடையின்றி கஷ்டப்படவோ நேர்ந்தால் அது பணக்காரர்கள் தமது கடமையைப் புறக்கணித்ததன் விளைவுதான் என்பதை உணர்த்தியமை.

**27.** பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்க.

A - மதீனாவில் பிறந்து, வாழ்ந்து, அங்கேயே மரணித்தவர்.
B - அல் - உம்மு என்ற நூலைத் தொகுத்தவர்.
C - 'இமாமுல் மதீனா' என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்.
D - இலங்கை முஸ்லிம்களுள் அதிகமானவர்கள் இவரது மத்ஹபைப் பின்பற்றுகின்றனர்.
E - இவர் பக்தாதில் குறிப்பிட்ட கருத்துக்கள் 'கவ்லுல் கதீம்' என அழைக்கப்படுகின்றது.
F - முஅத்தா என்ற நூலைத் தொகுத்தவர்.

மேலுள்ளவற்றுள் இமாம் மாலிக் (ரஹ்) அவர்களுடன் தொடர்பான கூற்றுக்களை மாத்திரம் கொண்ட தெரிவினைத் தெரிவுசெய்க.

(1) A B C (2) A D E (3) A C F (4) B C D (5) B C F

**28.** பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்க.

A - இஸ்லாத்தின் மூலாதாரங்கள் வஹியின் அடிப்படையில் அமையப்பெற்றனவாகும்.
B - நபி (ஸல்) அவர்களது போதனைகள் அரேபிய சமூகத்திற்கு மாத்திரம் உரித்துடையனவாகும்.
C - இஸ்லாம் துறவு வாழ்வை வலியுறுத்துகின்றது.
D - இஸ்லாம் நெகிழும், நெகிழாத் தன்மை கொண்ட மார்க்கமாகும்.
E - இஸ்லாம் மனிதனது ஆன்மீக, லௌகீகச் செயற்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கிய மார்க்கமாகும்.
F - இஸ்லாத்தில் மனிதன் உயர் படைப்பாகக் கொள்ளப்படுகின்றான்.

மேலுள்ளவற்றில் இஸ்லாத்தின் சிறப்பம்சங்களை உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A B C (2) A C D (3) A D E (4) B C D (5) B E F

**29.** பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்க.

A - ஏதேனும் ஒரு வகையில் தீங்கு விளைவிக்கும் தொழில்களைத் தவிர நேர்மையான உழைப்புக்குரிய எல்லா வாயில்களையும் இஸ்லாம் திறந்து வைத்துள்ளது.
B - தமது உணவுத் தேவையை அல்லாஹ்வின் மீது பாரஞ் சுமத்தி விட்டு எவ்வித உழைப்பும் இன்றி மஸ்ஜிதில் முடங்கிக் கிடந்தவர்களை உமர் (ரழி) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.
C - "பறவைகள் காலையில் வெறும் வயிற்றுடன் சென்று மாலையில் நிரம்பிய வயிற்றுடன் திரும்புகின்றன." எனும் நபிமொழி மனிதன் உணவு தேட முயற்சிப்பது அவசியம் என்பதை உணர்த்துகின்றது.
D - தனது இனபந்துக்கள், அயலவர்களுக்கு உபகாரம் செய்யவும், சமூக நலப்பணிகளில் பங்களிப்பு செய்யவும் தொழிலில் ஈடுபட்டு வருமானம் ஈட்டுவதை இஸ்லாம் வலியுறுத்துவதில்லை.
E - உழைக்கும் சக்தியுள்ள ஒருவர் எவ்விதத் தொழிலிலும் ஈடுபடாது ஸகாதை எதிர்பார்த்திருப்பதை இஸ்லாம் வெறுக்கின்றது.

மேலுள்ளவற்றுள் இஸ்லாத்தில் உழைப்பின் முக்கியத்துவம் பற்றிய கூற்றுக்களைக் கொண்ட தெரிவினைத் தெரிவுசெய்க.

(1) A, B மாத்திரம் (2) A, B, C மாத்திரம்
(3) A, B, C, D மாத்திரம் (4) A, B, C, E மாத்திரம்
(5) A, B, C, D, E அனைத்தும்

Department of Examinations - Sri Lanka

**30.** பின்வருவனவற்றைக் கருதுக.

A - நபி ஈஸா (அலை) அவர்களது வருகை
B - ய.ஃ.ஜூஜ், ம.ஃ.ஜூஜ் கூட்டத்தினரது வருகை
C - சூரியன் மேற்கில் உதித்தல்
D - அறியாமை அதிகரித்தல்
E - கட்டடங்களைக் கட்டுவதில் போட்டி மனப்பான்மை நிலவுதல்

மேலுள்ளவற்றுள் யுக முடிவுக்கான பெரிய அடையாளங்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ள தெரிவினைத் தெரிவுசெய்க.

(1) ABC (2) ABD (3) BDE (4) BAE (5) CBE

**31.** இஸ்லாமிய வரலாற்றில் பைத்துல்மால் நிர்வாகத்துக்கென பாதுகாப்பான தனிக்கட்டடங்கள் அமைக்கப்பட முன்னர் அது,

(1) நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொறுப்பில் இருந்தது.
(2) கலீபாக்களின் கண்காணிப்பின் கீழ் இருந்தது.
(3) மஸ்ஜிதை அண்மித்த பொது இடத்தில் அமைந்திருந்தது.
(4) கவர்னர்களின் பொறுப்பில் இருந்தது.
(5) பைத்துல்மாலுக்கென நியமிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பில் இருந்தது.

**32.** பின்வருவன சட்ட மூலாதாரங்கள் தொடர்பான சில கூற்றுக்களாகும்.

A - தீர்ப்பொன்றை மேற்கொள்ள ஒன்றுக்கு மேற்பட்ட முஜ்தஹித்கள் இருக்க வேண்டும்.
B - பிரதேச, நிற, மொழி வேறுபாடுகளைத் தவிர்த்து அனைவரும் கருத்தில் ஒற்றுமைப்பட வேண்டும்.
C - பெரும்பான்மை முஜ்தஹித்களின் முடிவுகள் தீர்ப்பாகக் கொள்ளப்பட முடியும்.
D - முஜ்தஹித்களில் பெரும்பான்மையானோர் குறித்ததொரு தீர்ப்பில் உடன்படுவதோடு மற்றும் சிலர் அதில் முரண்பட முடியும்.
E - ஒப்பு நோக்குதல் அடிப்படையில் புதிய பிரச்சினைகளுக்குத் தீர்ப்பு வழங்குதல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
F - நபித்தோழர்களது கருத்துக்களும் வாழ்வும் துணை மூலாதாரமாகக் கொள்ளப்படுகின்றது.

மேற்படி கூற்றுக்களுள் இஜ்மா தொடர்பான கருத்துக்களை மாத்திரம் கொண்ட தெரிவினைத் தெரிவுசெய்க.

(1) ABCD (2) ABCE (3) ABCF (4) ACEF (5) BCDF

**33.** மகாவம்சத்தில் 'யவன' என்ற பதம் முதலில் கிரேக்கர்களையும் பின்னர் அரேபியர்களையும் குறிப்பதாகக் குறிப்பிடும் மகாவம்ச மொழிபெயர்ப்பாளர் யார்?

(1) கலாநிதி சிறிமா கிரிபாமுன ஆவார்.
(2) குமாரி ஜயவர்தன ஆவார்.
(3) சேர் தோமஸ் ஆர்னல்ட் ஆவார்.
(4) கலாநிதி லோனா தேவராஜா ஆவார்.
(5) வில்ஹெல்ம் கெய்கர் ஆவார்.

**34.** பின்வருவனவற்றைக் கருதுக.

A - கருத்து வேறுபாடுகளின்போது ஒருவரை ஒருவர் மதித்து நடத்தல்.
B - கருத்து வேறுபாடுடைய அம்சங்களில் பரஸ்பரம் நியாயம் காணல்.
C - அகீதா போன்ற அடிப்படையான விடயங்களில் விட்டுக்கொடுத்து சமரசம் பேணல்.
D - கருத்துக்களில் பிடிவாதப் போக்கைத் தவிர்த்தல்.
E - வாக்குவாதத்தின்போது அடுத்தவர் பற்றிய நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளல்.

மேற்குறிப்பிட்டவற்றுள் கருத்து வேறுபாடுகளின்போது கவனத்திற்கொள்ள வேண்டிய ஒழுக்கங்களை உள்ளடக்கிய தெரிவினைத் தெரிவுசெய்க.

(1) ABCD (2) ABDE (3) ABCE
(4) BCDE (5) CDEA

Department of Examinations - Sri Lanka

**35.** பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்க.

A - உர்பை ஒரு சட்ட மூலாதாரமாகக் கொள்வதை சில சட்ட அறிஞர்கள் அங்கீகரிக்கின்றனர்.
B - மனிதன் செயல் சுதந்திரம் அற்றவன் என்பது மு∴தஸிலாக் கோட்பாடாகும்.
C - ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது குறைஷிகளுடன் சமாதானம் பேசுவதற்காக கலீபா உமர் (ரழி) அவர்கள் மக்கா நகருக்கு அனுப்பப்பட்டார்கள்.
D - போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து வெளியேற்ற முஸ்லிம்களும் இணைந்து போராடினார்கள்.
E - இலங்கையில் அரேபியரே இஸ்லாத்தை அறிமுகப்படுத்தினர்.

மேலுள்ளவற்றுள் சரியான கூற்றுகளை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

(1) A B C (2) A B D (3) A C D
(4) A D E (5) B C E

- **36** முதல் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் **X, Y** எனும் நிரல்களின் கீழ் தகவல்கள் சில தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் உள்ளவை **X** நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒருவகையில் தொடர்புபட்டவை. **X** நிரலுக்கேற்ப **Y** நிரலிலுள்ள விடயங்களை பொருத்தமான வகையில் ஒழுங்குபடுத்தும்போது வரும் சரியான தொகுதியைத் தெரிவு செய்க.

**36.**

| | X | Y |
|---|---|---|
| (i). | பைஉல் முஅஜ்ஜல் | A - பொறுப்புச் சாட்டுதல் |
| (ii). | கர்ளுல் ஹஸன் | B - தரகர் சேவை |
| (iii). | அத்த∴மீன் | C - வட்டியில்லா அழகிய கடன் |
| (iv). | வகாலா | D - பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபாரம் |
| (v). | ஸம்ஸரா | E - காப்புறுதி |
| | | F - ஈடுவைத்தல் |

(1) A B C D E (2) A C D E F (3) B C D E F
(4) D C E A B (5) D C F E B

**37.**

| | X | Y |
|---|---|---|
| (i). | இமாம் புகாரி | A - ஹி : 209 |
| (ii). | இமாம் முஸ்லிம் | B - ஹி : 215 |
| (iii). | இமாம் திர்மிதி | C - ஹி : 201 |
| (iv). | இமாம் அபூதாவூத் | D - ஹி : 204 |
| (v). | இமாம் நஸாஈ | E - ஹி : 194 |

(1) A B C D E (2) B C D A E (3) C D E B A
(4) D E A B C (5) E D A C B

**38.**

| | X | Y |
|---|---|---|
| 1. | மு∴தஸிலாக்கள் | A - இமாமத் கோட்பாட்டை பின்பற்றுவோர். |
| 2. | கவாரிஜ்கள் | B - ஈமானுக்கும் அமலுக்கும் தொடர்பில்லை. |
| 3. | ஷீஆக்கள் | C - அலி (ரழி) அவர்களது அணியிலிருந்து பிரிந்து சென்றார்கள். |
| 4. | முர்ஜிஆக்கள் | D - அனைத்தும் கழாகத்ரின் படியே நடக்கின்றன. |
| 5. | ஜபரிய்யாக்கள் | E - அல் - குர்ஆன் அல்லாஹ்வினால் படைக்கப்பட்டது. |

(1) A B C D E (2) A C D B F (3) B E A D C (4) D C F A B (5) E C A B D

Department of Examinations - Sri Lanka

**39.**

| | X | Y |
|---|---|---|
| 1. | மகாஸித் | A - சட்டவிதிகள் |
| 2. | கவாயித் பிக்ஹிய்யா | B - நோக்கங்கள் |
| 3. | ஹாஜிய்யாத் | C - ஆடம்பர நிலை |
| 4. | தஹ்ஸீனிய்யாத் | D - அத்தியாவசிய நிலை |
| 5. | ழுரூரிய்யாத் | E - தேவை நிலை |

(1) ABCDE (2) ACBDE (3) ADCEB (4) BAECD (5) BCDEA

**40.**

| | X | Y |
|---|---|---|
| 1. | தொழுகை | A - உலகளாவிய முஸ்லிம் சமூகத்தில் ஓர் அங்கத்தவனாதல் |
| 2. | ஸகாத் | B - அயலவர்களது உரிமைகளை மதித்து நடக்கும் நிலை உருவாகுதல் |
| 3. | நோன்பு | C - கடமையுணர்வு, நேரத்திற்கு இயங்குதல், சுறுசுறுப்பு உண்டாதல் |
| 4. | ஹஜ் | D - உலோபித்தனம் நீங்கி, தாராளத்தன்மை வளர்தல் |
| 5. | ஹுகூகுல் இபாத் | E - அடுத்தவர்களது கஷ்டங்களில் பங்குகொள்ளும் மனப்பக்குவம் ஏற்படல் |

(1) ABCDE (2) ACBDE (3) BCADE (4) CDEAB (5) CBDEA

**41.** இஸ்லாமிய வாரிசுரிமை அமைப்பில் 'துல் அர்ஹாம்' என அழைக்கப்படுவோர்
(1) மரணித்தவரது நெருங்கிய குடும்ப உறவினர்களாவர்.
(2) மரணித்தவரது திருமண உறவினர்களாவர்.
(3) மரணித்தவரது பால்குடி உறவினர்களாவர்.
(4) உரிமையாளர்களுக்குரிய பங்குகள் போக மீதமுள்ள பங்குகளைப் பெறுவோராவர்.
(5) குறித்த சொத்துக்கு வாரிசுகளாக மூன்றாவது நிலையில் சேர்வோராவர்.

**42.** தாபிஈன்கள் காலத்தின் ஆரம்பத்தில் ஹதீஸ் துறை எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கான காரணம் **அல்லாதது**
(1) குலபாஉர் ராஷிதூன்களுக்குப் பின்னர் ஆட்சிபீடம் ஏறிய ஆட்சியாளர்களில் ஒரு சிலரின் மோசமான செயற்பாடுகள்
(2) குலபாஉர் ராஷிதூன்கள் ஹதீஸின் பாதுகாப்பு விடயத்தில் கைக்கொண்ட முயற்சிகள் பின்னர் கைவிடப்பட்டமை
(3) எழுத, வாசிக்கத் தெரிந்தவர்கள் குறைவாகக் காணப்பட்டமை
(4) ஒரு நூற்றாண்டு காலம் வரை ஹதீஸ்கள் தொகுக்கப்படாமை
(5) பகுத்தறிவின் அடிப்படையில் தீர்ப்புக் கூறும் அளவுக்கு நிலைமை மோசமாகியமை

**43.** மஹப்பதுர் ரஸுல் குறித்துக்காட்டுவது
(1) அல்லாஹ்வின் தூதர் என்பதையே.
(2) மனித சமூகத்துக்கு முன்மாதிரியானவர் என்பதையே.
(3) நபியவர்கள் மீது அன்பு காட்டுவதையே.
(4) மனிதர்களால் பின்பற்றப்படத் தகுதியானவர் என்பதையே.
(5) நபியின் மீது அதிகமாக ஸலவாத்துச் சொல்வதையே.

**44.** மரணித்தவரின் சொத்துக்களைப் பயன்படுத்துகின்றபோது பின்வரும் எந்த விடயத்திற்கு முன்னுரிமையளிக்க வேண்டும்?
(1) வஸிய்யத்தை நிறைவேற்றல்
(2) உரியவர்களுக்கு சொத்துக்களைப் பகிர்ந்தளித்தல்
(3) நல்லடக்கத்துக்கான ஏற்பாடுகளைச் செய்தல்
(4) மரணித்தவருக்காக தருமம் செய்தல்
(5) மரணித்தவரது கடன்களை நிறைவேற்றல்

Department of Examinations - Sri Lanka

**45.** "அதிஷ்டத்தில் அடங்கக்கூடிய நான்கு அம்சங்களாவன, நல்ல மனைவி, விசாலமான வீடு, நல்ல அயலான்..." என்ற ஹதீஸ் தொடரில் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்ட நான்காவது விடயம் எது?
(1) நல்ல பிள்ளைகள் (2) நல்ல வாகனம்
(3) வருமானமீட்டும் தொழில் (4) நல்ல நண்பன்
(5) இஸ்லாமியச் சூழல்

- **46** தொடக்கம் **50** வரையிலான ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. அச்சோடி கூற்றுகள் பற்றிய மிகப் பொருத்தமான தொடர்பைக் காட்டும் சரியான விடையினைப் பின்வரும் அட்டவணையிலுள்ள **இலக்கம்** (1), (2), (3), (4), (5) என்பவற்றிலிருந்து தெரிவுசெய்க.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விளக்குகிறது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **46.** | அனைத்து ரசூல்மார்களுக்கும் வழங்கப்பட்ட தீன் ஒன்றாகவும் சட்டங்கள் வேறுபட்டதாகவும் காணப்பட்டன. | இமாம் அபுல் ஹஸன் அல் - அஷ்அரி (ரஹ்) அவர்கள் இஸ்லாமிய அகீதாவை தூய வடிவில் பாதுகாப்பதற்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்கள். |
| **47.** | அல் - குர்ஆன் இறைவனின் தூய வார்த்தைகள் ஆகும். | அல் - குர்ஆனின் விடய உள்ளடக்கம், சொல்லாட்சி, உவமைகள், இலக்கிய நயம் ஆகியன மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டவையாகும். |
| **48.** | ஹிஜ்றி 5 ஆம் நூற்றாண்டு பிக்ஹ் துறையின் பொற்காலம் என அடையாளப்படுத்தப்படுகின்றது. | அல் - குர்ஆனைப் புரிந்து கொள்ள ஹதீஸ்கள் தேவைப்படுவதில்லை. |
| **49.** | அகீதா, இபாதா, ஹுதூத், கப்பாரா என்பவற்றில் இஜ்திஹாத் இடம்பெற முடியும். | புதிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்வைக்க இஜ்திஹாத் அவசியம் ஆகும். |
| **50.** | மார்க்கத் தீர்ப்புகளை வழங்குவதற்கு அல் - குர்ஆனில் ஆதாரம் கிடைக்காத போது ஸுன்னாவை ஆதாரமாகக் கொள்ள வேண்டும். | இமாம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள் கியாஸ், இஸ்திஹ்ஸான் என்பவற்றை சட்டவாக்கத்துக்கு அடிப்படையாகக் கொள்ளவில்லை. |

* * *

Department of Examinations - Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

විෂය අංකය / பாட இலக்கம்: **44**

විෂයය / பாடம்: **இஸ்லாம்**

### ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்

I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 5 | 21. | 1 | 31. | 3 | 41. | 5 |
| 02. | 2 | 12. | 5 | 22. | 4 | 32. | 1 | 42. | 3 |
| 03. | 4 | 13. | 3 | 23. | 2 | 33. | 5 | 43. | 3 |
| 04. | 4 | 14. | 3 | 24. | 4 | 34. | 2 | 44. | 3 |
| 05. | 1 | 15. | 4 | 25. | 3 | 35. | 4 | 45. | 2 |
| 06. | 2 | 16. | 2 | 26. | 2 | 36. | 4 | 46. | 1 |
| 07. | 3 | 17. | 4 | 27. | 3 | 37. | 5 | 47. | 5 |
| 08. | 4 | 18. | 1 | 28. | 3 | 38. | 5 | 48. | 4 |
| 09. | 2 | 19. | 2 | 29. | 4 | 39. | 4 | 49. | 2 |
| 10. | 1 | 20. | 1 | 30. | 1 | 40. | 4 | 50. | 3 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் $1 \times 50 = 50$

Department of Examinations - Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

ඉස්ලාම් II
இஸ்லாம் II
Islam II

44 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) 'கியாஸ்' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) கியாஸின் ருக்ன்கள் **நான்கையும்** குறிப்பிட்டு உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) கியாஸின் வகைகளைக் குறிப்பிட்டு அவற்றில் **இரண்டை** உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

(iv) கியாஸின் பயன்கள் **நான்கை** விரிவாக விளக்குக. (08 புள்ளிகள்)

**2.** (i) 'தலாக்' என்பதன் பொருள் யாது? (02 புள்ளிகள்)

(ii) தலாக் ரஜஇ, பாயின் ஆகிய **இரு** பிரிவுகளையும் தெளிவுபடுத்துக. (04 புள்ளிகள்)

(iii) 'இத்தா' என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதன் வகைகளுள் **இரண்டைக்** குறிப்பிட்டு விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) இத்தாவின் நோக்கங்கள் **நான்கை** விரிவாக விளக்குக. (08 புள்ளிகள்)

**3.** (i) இஸ்லாமிய வங்கி முறையை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ii) இஸ்லாமிய வங்கி முறையின் அடிப்படைகள் **நான்கைச்** சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) முஆமலாத் தொடர்பான இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினை** விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) பைத்துல்மாலின் பரிபாலனம் தொடர்பாக கலீபாக்கள் மேற்கொண்ட **நான்கு** செயற்பாடுகளை அடையாளப்படுத்தி விவரிக்குக. (08 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka

## பகுதி II

4. (i) இஸ்லாத்தில் சமூக வாழ்வின் முக்கியத்துவத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இஸ்லாமிய சமூக அமைப்பின் சிறப்பம்சங்களுள் சமத்துவம், சகோதரத்துவம் பற்றி விவரிக்குக. (10 புள்ளிகள்)

5. (i) இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகளுள் **ஐந்தை** அடையாளப்படுத்தி விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) ஒரு முஸ்லிமின் வாழ்வை நெறிப்படுத்துவதில் மஸ்ஜித் வகிக்கும் பங்கினை விவரிக்குக. (10 புள்ளிகள்)

6. (i) இஸ்லாத்தில் இஜ்திஹாத் பெறும் முக்கியத்துவத்தை அல் - குர்ஆன், ஸுன்னா ஆதாரங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு பிக்ஹ் துறை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புக்களை விவரிக்குக. (10 புள்ளிகள்)

7. (i) இலங்கை வரலாற்றில் சிங்கள மன்னர்கள் முஸ்லிம் சமூகத்தோடு கொண்டிருந்த நட்புறவையும் தொடர்பினையும் உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் பின்வருவனவற்றின் தொடர்பை ஆராய்க.

(அ) மாந்தைத் துறைமுகம்

(ஆ) இப்னு பதூதா (10 புள்ளிகள்)

8. பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) மறுமை வாழ்வு உண்டு என்பதற்கான ஆதாரங்கள் (05 புள்ளிகள்)

(ii) இஸ்லாத்தில் சுவன வாழ்வு (05 புள்ளிகள்)

(iii) இஸ்லாத்தில் திருமண முன் ஆயத்தம் (05 புள்ளிகள்)

(iv) அரேபிய - இலங்கை உறவுகள் (05 புள்ளிகள்)

***

Department of Examinations - Sri Lanka

## பகுதி (I)

1. (i) **கியாஸ் என்றால் என்ன?** **(2 புள்ளிகள்)**
(ii) **கியாஸின் ருகூன்கள் நான்கையும் குறிப்பிட்டு உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.** **(4 புள்ளிகள்)**
(iii) **கியாஸின் வகைகளைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.** **(6 புள்ளிகள்)**
(iv) **கியாஸின் பயன்கள் நான்கை விரிவாக விளக்குக.** **(8 புள்ளிகள்)**

(i) **கியாஸ் என்றால் என்ன?**

- *மொழிக் கருத்து:*
*கியாஸ் - அளத்தல், ஒப்புநோக்குதல், நிகர்காணுதல், கணிப்பீடு செய்தல், சமப்படுத்தல்.*

- *இஸ்லாமிய பரிபாஷையில்:*
*சட்டம் தெளிவாக இல்லாத ஒரு புதிய பிரச்சினைக்குரிய தீர்ப்பை, சட்டம் தெளிவாகக் கூறப்பட்ட அதேபோன்ற ஒரு பிரச்சினையுடன் ஒப்புநோக்கி, அத்தீர்ப்பை புதிய பிரச்சினைக்கு வழங்குதல்.*

**(மொழிக் கருத்துக்கு ஒரு புள்ளியும் பரிபாஷைக்கு ஒரு புள்ளியுமாக மொத்தம் 2 புள்ளிகள்)**

(ii) **கியாஸின் ருகூன்கள் நான்கையும் குறிப்பிட்டு உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.**

1. *அல்-அஸ்ல்*
2. *அல்-பர்உ*
3. *அல்-இல்லத்*
4. *அல்-ஹுக்கும்*

*அர்கானுல் கியாஸ்:*

1. *அல்-அஸ்ல்: உவமேயம் / அடிப்படை / மூலப்பிரச்சினை / முதற் பொருள்*
*அல்-குர்ஆன், சுன்னா, இஜ்மாவின் மூலம் தெளிவாக சட்டம் குறிப்பிடப்பட்ட (அடிப்படை) விடயம்.*
*உதாரணம்: மதுபானம்*

2. *அல்-பர்உ உவமானம் / கிளைப்பிரச்சினை*
*தீர்வு காண வேண்டிய புதிய பிரச்சினை. இதற்கு இரண்டு நிபந்தனைகள் உண்டு.*
*உதாரணம்: விஸ்கி (இது போன்ற உதாரணங்கள்)*

3. *அல்-இல்லத்: பொதுத்தன்மை / பொதுக்காரணி*

*இரண்டு அம்சங்களிலும் காணப்படும் பொதுத்தன்மை அல்லது ஒத்த தன்மை*
*உதாரணம்: போதை*

Department of Examinations - Sri Lanka

4. அல் ஹுக்ம்: சட்டத் தீர்ப்பு
அல்அஸ்லின் தீர்ப்பை அல்பர்உவுக்கு வழங்கப்படும்.
உதாரணம்: சாராயம் அருந்துவது ஹராம் என்ற விடயத்தை நோக்கினால் சாராயத்திலுள்ள போதையூட்டும் தன்மை "விஸ்கி"யிலும் இருப்பதனால் விஸ்கியும் ஹராமாகும்.

**(ருகூன்கள் நான்கை குறிப்பிட்டிருப்பின் 2 புள்ளிகளும், அவற்றை உதாரணங்களுடன் விளக்கியிருப்பின் 2 புள்ளிகளுமாக மொத்தம் 2 + 2 = 4 புள்ளிகள்)**

(iii) **கியாஸின் வகைகளைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.**

- இல்லத்தின் பெறுமானத்தை மையமாக வைத்து அதனை மூன்றாக வகைப்படுத்த முடியும்

1. கியாஸுல் அஃலா
2. கியாஸுல் முஸாவி
3. கியாஸுல் அத்னா

1. கியாஸுல் அஃலா
பர்உவில் காணப்படும் இல்லத் அஸ்லின் இல்லத்தை விட பெறுமானத்தில் கூடியதாக இருத்தல்
உதாரணம் : "பெற்றோருக்கு 'சீ' என்ற வார்த்தை கூறுவது கூடாது" என அல்-குர்ஆன் கூற, பெற்றோருக்கு அடிப்பது அதனைவிட பெறுமானத்தில் கூடியதாகும்.

2. கியாஸுல் முஸாவி
அஸ்லிலும் பர்உவிலும் காணப்படும் பொதுத் தன்மையின் பெறுமானம் சமனானதாக இருப்பது கியாஸ் முஸாவி எனப்படும்.
உதாரணம் : நாய் நக்கிய பாத்திரத்தை ஏழு முறை கழுவுமாறு ஹதீஸ் கூறுகிறது. பன்றி நக்கினாலும் ஏழு முறை கழுவ வேண்டும்.

3. கியாஸுல் அத்னா
அஸ்லில் இருக்கும் பொதுத் தன்மையின் பெறுமாணத்தை விட பர்உவில் காணப்படும் பொதுத் தன்மை தரத்தில் குறைந்திருப்பதை இது குறிக்கின்றது.
உதாரணம் : மது - புகைத்தல்

**(கியாஸின் மூன்று வகைகளும் குறிப்பிடப்பட்டிருப்பின் 2 புள்ளிகள், அவற்றில் இரண்டை விளக்கியிருப்பின் 2 x 2 = 4 புள்ளிகள் மொத்தம் 2 + 4 = 6 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

(iv) **கியாஸின் பயன்கள் நான்கை விரிவாக விளக்குக.**

- இஸ்லாமிய சட்டக்கலை வளர்ச்சிக்கு துணை செய்கின்றது.
- புதிதாக தோன்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவுகின்றது.
- எல்லாக் காலத்திலும் தோன்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற முடியும் என்ற கருத்தை உறுதிப்படுத்துகின்றது.
- இஸ்லாத்தின் இயக்க சக்தியை பேண வழி செய்கின்றது.

**(இவை போன்ற 4 பயன்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 4 புள்ளிகளும், அவற்றில் நான்கை விளக்கியிருப்பின் 4 x 2 = 8 புள்ளிகள்)**

2. (i) **தலாக் என்பதன் பொருள் யாது?** **( 2 புள்ளிகள்)**
(ii) **தலாக் ரஜஈ, பாயின் ஆகிய இரு பிரிவுகளையும் தெளிவுபடுத்துக.** **( 4 புள்ளிகள்)**
(iii) **இத்தா என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதன் வகைகளுள் இரண்டினை குறிப்பிட்டு விபரிக்குக.** **( 6 புள்ளிகள்)**
(iv) **இத்தாவின் நோக்கங்கள் நான்கை விரிவாக விளக்குக.** **( 8 புள்ளிகள்)**

(i) **தலாக் என்பதன் பொருள் யாது?**

- தலாக் என்பதன் மொழிக் கருத்து: விடுவித்தல், மணமுறிவு, சுதந்திரமடைதல் என்பனவாகும்.

- இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் ஆண்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற விவாகரத்துரிமையைக் குறிக்கின்றது.

**(சொல் விளக்கம் வழங்கப்பட்டிருப்பின் 01 புள்ளியும் விளக்கத்துக்கு 01 புள்ளியுமாக மொத்தமாக 2 புள்ளிகள்)**

(ii) **தலாக் ரஜஈ, பாயின் ஆகிய இரு பிரிவுகளையும் தெளிவுபடுத்துக.**

1. ரஜஈ (மீளத்தக்கது):
- தலாக் ரஜஈ என்பது "மீளவாய்ப்புள்ள தலாக்" என்பது இதன் கருத்தாகும்.
- முறையான தலாக்கின் போது முதல் தடவை அல்லது இரண்டாம் தடவை தலாக் சொல்லப் பட்டு, இத்தாக் காலம் முடிவதற்குள் மீண்டும் சேர்ந்து வாழ்வதற்குத் தம்பதிகளுக்கு உரிமை உண்டு. இவ்வாறு சேர்ந்து வாழ்வதற்கு புதிய நிபந்தனைகள் எதுவும் இல்லை.

2. பாயின் (மீள முடியாதது):
- இது இரு வகைப்படும்.



Department of Examinations - Sri Lanka

1. பாயின் ஸுக்ரா (சிறிய பிரிவினை):

- *தலாக் பாஇன் ஸுக்ரா என்பது முறையான தலாக்கின் போது மூன்றாம் முறை தலாக் சொல்லப்படாத நிலையில் இத்தாக் காலம் பூர்த்தியாகி விடுமானால் புதியதொரு நிகாஹ் ஒப்பந்தத்தின் மூலம் தம்பதிகள் மீண்டும் சேர்ந்து வாழ அனுமதியுள்ள நிலையினையே குறிக்கின்றது.*

2. பாயின் குப்ரா (பெரிய பிரிவினை):

- *தலாக் பாஇன் குப்ரா என்பது மூன்று தலாக்கும் கூறப்பட்டு முடிவுற்ற நிலையில் உள்ள பெரிய பிரிவினையைக் குறிக்கின்றது. இதன் பின்னர் இவர்கள் திருமணத்தின் மூலம் சேர்ந்து வாழ விரும்பினால் அதற்குரிய வழிகாட்டலையும் அல்குர்ஆன் தெளிவுபடுத்தியுள்ளது.*

- *அப்பெண்ணின் இந்தாக்காலம் முடிந்த பின் அப்பெண் வேறொரு ஆணை திருமணம் செய்து, அக்கணவனுடன் குடும்பம் நடத்தி, அக்கணவன் மூலம் அவள் விவாகரத்துப் பெற வேண்டும் அல்லது முந்திய கணவன் இறந்தால் அப்பெண் மீண்டும் தனது இத்தாக்காலத்தை நிறைவு செய்த பின்னர் மீண்டும் புதிய உடன்படிக்கை மூலம் அவனுடன் சேர அனுமதியுண்டு*

**(இவ்வாறு தெளிவுபடுத்தப்பட்டிருப்பின் 4 புள்ளிகள்)**

(iii) **இத்தா என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதன் வகைகளுள் இரண்டினை குறிப்பிட்டு விபரிக்குக.**

- *அறிமுகம்: இத்தா என்பது 'அத்த' எனும் வினையிலிருந்து தோன்றியது. கணித்தல், எண்ணுதல் என்ற மொழிக்கருத்தைத் தரும்.*

- கணவனின் இழப்புக்காக அல்லது பிரிவுக்காக சட்டவிதிகளுக்கமைய மனைவி குறிப்பிட்ட சில காலத்துக்கு மறுமணம் முடிக்காமல் தவிர்ந்திருப்பதை இது குறிக்கும்.

  இத்தா அனுஷ்டிக்கும் பெண்களை வைத்து வகைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

1. *கணவன் மரணித்த பெண்களுக்கான இத்தா:*

   *4 மாதமும் 10 நாட்களும் "உங்களில் எவரேனும் மனைவிகளை விட்டு விட்டு இறந்தால் அவர்கள் நான்கு மாதம் பத்து நாட்கள் எதிர்பார்த்திருக்கவும்." (பகரா: 234)*

2. **தலாக் கூறப்பட்ட பெண்களது இத்தா:**

   **மாதவிடாய் ஏற்படும் பெண்களது இத்தா : இவர்களுக்கான இத்தா மூன்று குரூஉகள் ஆகும்."விவாகரத்துக் கூறப்பட்ட ஒரு பெண் தங்களுக்கு மூன்று மாதவிடாய் (மூன்று குறூஉகள்) காலம் எதிர்பார்த்திருக்கவும்." (பகரா: 228)**

   **மாதவிடாய் இன்னும் ஏற்படாத அல்லது மாதவிடாய் நின்றுவிட்ட தலாக் செய்யப்பட்ட பெண்களுக்கு:** இவர்களுக்கான இத்தாக் காலம் மூன்று மாதங்களாகும். "(தலாக் சொல்லப்பட்ட மனைவிகளாகிய) உங்கள் பெண்களில் எவரும் (அதிக வயதாகி) மாதவிடாயின் நம்பிக்கையிழந்து (இத்தாவைக் கணக்கிட என்ன செய்வதென்று) நீங்கள்

Department of Examinations - Sri Lanka

சந்தேகத்திற்குள்ளாகிவிட்டால் அவர்களுக்கும் இன்னும் எவர்களுக்கு இது வரையில் மாதவிடாய் ஏற்படவில்லையோ அவர்களுக்கும் இத்தா(வின் தவணை) மூன்று மாதங்களாகும்." (அத்தலாக்: 4)

3. **கர்ப்பிணிப் பெண்களுக்கான இத்தா:**

**இப்பெண்கள் கணவனை இழந்த பெண்களாக இருப்பினும், விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்களாக இருப்பினும் அவர்களது இத்தாக்காலம் குழந்தைப் பேறு வரையாகும்.**

"கர்ப்பிணிப் பெண்களுக்கு அவர்களுடைய இத்தா(வின் தவணை) அவர்கள் பிரசவிக்கும் வரையிலாகும்." (அத்தலாக்: 4)

தலாகிற்கான இத்தாவிலும் சரி, அல்லது கணவனின் மரணத்திற்கான இத்தாவிலும் சரி பிரசவம் நிகழ்ந்துவிட்ட உடனே இத்தா முடிவுறும். அது குறைமாதச் சிசுக்கட்டி விழுந்தாலும் சரியே.

**('இத்தா' என்பதனை வரைவிலக்கனப்படுதியிருப்பின் இரண்டு புள்ளிகளும் அதன் வகைகள் இரண்டு குறிப்பிட்டு விளக்கப்பட்டிருப்பின் 2 x 2 = 4 புள்ளிகளுமாக மொத்தம் 6 புள்ளிகள்)**

(iv) **இத்தாவின் நோக்கங்கள் நான்கை விரிவாக விளக்குக.**

1. இறைகட்டளையை ஏற்று நிறைவேற்றுதல்.
2. உளத்தாக்கங்களில் இருந்து மீட்சி பெறுவதற்கான சந்தர்ப்பமாக அமைதல்.
3. முன்னைய கணவன் மூலம் கருவுற்றிருக்கிறாளா என்பதை அவதானிப்பதற்குரிய காலமாக அமைதல்.
4. கணவனை இழந்த பெண் துக்கம் அனுஷ்டிப்பதற்குரிய கால எல்லையை வரையறுத்தல்.
5. மறுமணம் பற்றிய தீர்க்கமான ஒரு முடிவுக்கு வருவதற்கான சந்தர்ப்பமாக அமைதல்.
6 தலாக் ரஜஈ ஆயின் மீண்டும் இணைந்து வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல். மேலும், தன் தவறுகளை புரிந்து அவற்றுக்காக வருந்தி மீண்டும் இணைந்து வாழ்வதற்கான வாய்ப்பைப் பெறல்.
7. ஒரு குழந்தையின் பல்துறை சார்ந்த உரிமைகளைப் பேணுவதற்காக (உ-ம்: தந்தை, வாரிசு சொத்து, மஹ்ரமி-அஜ்னபி தீர்மானித்தல்)

**(இவை போன்ற நான்கு கருத்துக்கள் கூறப்பட்டிருப்பின் 4 x 1 = 4 புள்ளிகளும் விளக்கப்பட்டிருப்பின் 4 x 2 = 8 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

3. (i) **இஸ்லாமிய வங்கி முறையை வரைவிலக்கணப்படுத்துக.** **(2 புள்ளிகள்)**

(ii) **இஸ்லாமிய வங்கி முறையின் அடிப்படைகள் நான்கினை சுருக்கமாக விளக்குக.** **(4 புள்ளிகள்)**

(iii) **முஆமலாத் தொடர்பான இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள் நான்கைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினை விளக்குக.** **(6 புள்ளிகள்)**

(iv) **பைத்துல் மாலின் பரிபாலனம் தொடர்பாக கலீபாக்கள் மேற்கொண்ட நான்கு செயற்பாடுகளை அடையாளப்படுத்தி விபரிக்குக.** **(8 புள்ளிகள்)**

(i) **இஸ்லாமிய வங்கி முறையை வரைவிலக்கணப்படுத்துக.**

கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் வட்டியைத் தவிர்த்து, இஸ்லாமிய பொருளியல் வரம்புகளைப் பேணி, சமூக நலனை அடிப்படையாகக் கொண்டு, மக்களிடையே கொடுக்கல் வாங்கலை இலகுபடுத்தும் நோக்கில் செயற்படும் நிறுவனமே இஸ்லாமிய வங்கியமைப்பாகும்.

**(வரைவிலக்கனத்துக்கு 2 புள்ளிகள்)**

(ii) **இஸ்லாமிய வங்கி முறையின் அடிப்படைகள் நான்கினை சுருக்கமாக விளக்குக.**

*1. வட்டியுடனான தொடர்புகள், செயற்பாடுகளை முற்றாகவே தவிர்த்தல்.*

*2. செல்வம் திரட்டுவதற்குரிய மூலதனமாகப் பணம் மட்டுமன்றி, மனிதனது உடல்ரீதியான, சிந்தனா ரீதியான உழைப்பும், நம்பிக்கை, நாணயமும் அவசியமாகின்றன என்ற கருத்தை வலியுறுத்தல்.*

*3. பொருளாதார அபிவிருத்தியோடு சமூக அபிவிருத்தியையும் தொடர்புபடுத்தல்.*

*4. செல்வப் பரிமாற்றங்களை இலகுபடுத்தல்.*

*5. உற்பத்தித் திறனை மேம்படுத்தல்.*

*6 மூலதனத்தை விருத்தி செய்தலும் உறுதிப்படுத்தலும்.*

*7. இஸ்லாமிய அடிப்படையிலான கூட்டுவாழ்வுக்கும், பரஸ்பர ஒத்துழைப்புக்கும் வழி வகுப்பதோடு மக்கள் மத்தியில் நீதியானதும், சமத்துவமானதுமான வளப்பகிர்வு இடம்பெற உதவுதல்.*

*08. சமூக ஐக்கித்துக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் வகைசெய்தல்.*

*09. ஷரீஅத் சட்ட விதிமுறைகளுக்கமைவான தொழிற்றுறைகளையும், முதலீட்டு முயற்சிகளையும் அறிமுகஞ் செய்தல்.*

*10. வங்கியின் இயக்கம், செயற்பாடுகள் ஆகிவற்றை இஸ்லாமிய ஷரீஅத் சட்ட விதிகளுக்கு இசைவாக அமைத்துக் கொள்ளல்.*

**(இவற்றுள் எவையேனும் 4 அடிப்படைகள் எழுதப்பட்டிருப்பின் ½ x 4 = 2 புள்ளிகள், இவற்றில் எவையேனும் 4 அடிப்படைகள் விளக்கி எழுதப்பட்டிருப்பின் 1 x 4 = 4 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

(iii) **முஆமலாத் தொடர்பான இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள் நான்கைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினை விளக்குக.**

- உண்மை பேசுதல்
- நாணயம்
- அந்-நஸீஹாவைப் பேணல்
- நேர்மையும் நீதமும்
- தாராளத் தன்மை
- ஏனையவர்களது உரிமைகளைப் பேணல்
- எல்லைப்படுத்தப்படாத தர்மம்

1) *உண்மை பேசுதல்:*

*"அத்-தாஜிரு அஸ்-ஸதூக்" என நபி (ஸல்) குறிப்பிட்டார்கள். "நேர்மையான வியாபாரி மறுமையில் நபிமார்களுடனும் நல்லடியார்களுடனும் ஷுஹதாக்களுடனும் இருப்பர்" (திர்மிதி).*

2) *நாணயம்:*

*"அவர்கள் எத்தகையவர்கள் என்றால் தமது வாக்குறுதிகளிலும் நம்பிக்கை நாணயத்திலும் பேணுதலுடன் நடந்து கொள்வார்கள்". (அல்-மு. ்.மினூன்: 08)*

3) *அந்-நஸீஹாவைப் பேணல்:*

*"மார்க்கம் என்பது நல்லுபதேசமாகும். அது அல்லாஹ்வுக்காகவும் அவனது தூதருக்காகவும் அவனது வேதத்திற்காகவும் முஸ்லிம்களின் தலைவர்களுக்காகவும் முஸ்லிம் சமூகத்துக்காகவும் அமையும்". (முஸ்லிம்)*

4) *நேர்மையும் நீதமும்:*

*"அளவையிலும் நிறுவையிலும் நீதியைக் கடைப்பிடியுங்கள்;" (அன்ஆம்: 152)*

5) *தாராளத் தன்மை:*

*"தாராளத்தன்மையோடு நடந்து கொள்ளும் ஓர் அடியான் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். அவன் விற்றாலும் வாங்கினாலும் உரிமையென்று கேட்கப்பட்டாலும் அவற்றில் தாராளத் தன்மையோடு நடந்து கொள்கிறான். (புஹாரி)*

6) *ஏனையவர்களது உரிமைகளைப் பேணல்:*

*"உங்களில் ஒருவர் தனது சகோதரனுக்கெதிராக வியாபாரம் செய்ய வேண்டாம். தனது சகோதரனின் திருமணப் பேச்சுக்கு எதிராக திருமணப் பேச்சில் ஈடுபட வேண்டாம்." (புஹாரி, முஸ்லிம்)*

7) *எல்லைப்படுத்தப்படாத தர்மம்:*

*"வியாபாரிகளே! நிச்சயமாக வணிகம் பொய்ச்சத்தியத்தையும் அத்துமீறல்களையும் கொண்டது. எனவே அவற்றிலிருந்து தூய்மை பெற தர்மம் செய்யுங்கள்". (அபூதாவுத்)*

**(நான்கு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 2 புள்ளிகளும் இரண்டு அடிப்படைகள் விளக்கப்பட்டிருப்பின் 2 x 2 = 4 புள்ளிகளுமாக மொத்தம் 6 புள்ளிகள்)**



Department of Examinations - Sri Lanka

(iv) **பைத்துல் மாலின் பரிபாலனம் தொடர்பாக கலீபாக்கள் மேற்கொண்ட நான்கு செயற்பாடுகளை அடையாளப்படுத்தி விபரிக்குக.**

- *“பைத்துல்மால்” என்பது இஸ்லாமிய நாட்டில் காணப்படும் அரச திறைசேரி ஆகும்.*
- *“பைத்துல்மால்” என்ற பெயர் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது காலப்பகுதியிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது.*

***பைத்துல் மாலின் பரிபாலனம் தொடர்பாக கலீபாக்கள் மேற்கொண்ட செயற்பாடுகள்:***
***உமர் (றழி) அவர்கள்:***

- *பைத்துல்மாலுக்கென தனியான பாதுகாப்பான கட்டிடங்கள் உருவாக்கப்பட்டன.*
- *பைத்துல்மாலில் ஒரு வருடத்துக்குள் திரளும் தொகையை அவ்வருட காலத்திற்குள்ளாகவே செலவு செய்திட உத்தரவிட்டார்கள்.*
- *அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்களை கூபாவின் ஆளுநராக நியமித்த போது பைத்துல்மால் விடயத்தில் அவருக்கு ஆலோசகராகவும், அமைச்சராகவும் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி)அவர்களை நியமித்தார்கள்*

***அலி (ரலி) அவர்கள்:***

- *ஒரு வாரத்தின் வரவுகளை அந்த வாரத்திற்குள் செலவு செய்திட உத்தரவிடுவார்கள். (அபுல் அப்பாஸ் அந்நாஸிரி)*
- *பைத்துல்மாலின் சொத்துக்களில் எது எந்த விடயத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதை தெரிவிப்பதற்காக வழிகாட்டிகளாக சட்ட அறிஞர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.*

**(இவை போன்ற 4 கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 4 x 1 = 4 புள்ளிகளும், 4 கருத்துக்கள் குறிப்பிட்டு விளக்கப்பட்டிருப்பின் 4 X 2 = 8 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

4. (i) **இஸ்லாத்தில் சமூக வாழ்வின் முக்கியத்துவத்தை விளக்குக.** **(10 புள்ளிகள்)**
(ii) **இஸ்லாமிய சமூக அமைப்பின் சிறப்பம்சங்களுள் சமத்துவம் சகோதரத்துவம் பற்றி விபரிக்குக.** **(10 புள்ளிகள்)**

(i) **இஸ்லாத்தில் சமூக வாழ்வின் முக்கியத்துவத்தை விளக்குக.**

- சமூகவியல் அறிஞர்கள் அவனை ஒரு சமூகப் பிராணி என அழைப்பர்.

- இஸ்லாத்தைப் பொறுத்தவரையில் மனிதனை அல்லாஹ்வின் பிரதிநிதியாகவே கண்ணியப்படுத்திப் பார்க்கின்றது.

  **"அல்லாஹ் மனிதனுக்குப் பேசக் கற்றுக் கொடுத்தான்"** (அர்ரஹ்மான்: 2)

  மேற்படி வசனத்தில் மனிதன் சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கான ஓர் ஊடகமாகப் பேச்சை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

- உலகிலுள்ள எல்லா உயிரினங்களையும் போலவே மனிதனும் பல்வேறு தேவைகளைக் கொண்டவன்.

- மனிதன் சமகாலத்தில் அல்லாஹ்வின் பிரதிநிதியாகவும், பகுத்தறிவு படைத்தவனாகவும் உள்ளதால் அவனது தேவைகள் எண்ணிலடங்காதவை. ஆனாலும் அத்தேவைகள் அனைத்தையும் அவனால் ஒரு போதும் தனித்து நின்று சுயமாகப் பெற்றுக் கொள்ள முடியாது.

- அவனது உடல் தேவைகளான பசி, தாகம், பாலுணர்வு போன்ற தேவைகளாக இருந்தாலும் உளவியல் தேவைகளான அன்பு, காப்பு, கணிப்பு தேவைகளாக இருந்தாலும், சமூகத் தேவைகளான போக்குவரத்து, கல்வி, மருத்துவம், விவசாயம் போன்றவற்றை நிறைவேற்ற மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் அவனுக்கு இருக்கின்றது.

- உலகில் தோன்றிய நாகரிகங்கள், கலாசாரங்கள் என்பன மனிதன் சேர்ந்து வாழ்வதற்கூடாகவே தோன்றியிருக்கின்றன.

- நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு எமக்குச் சமூக வாழ்வின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

- மக்கா காலப் பிரிவில் தனிநபர் உருவாக்கச் செயற்பாடும் மதீனா காலப்பிரிவில் தனிநபர்களை அடிப்படையாகக் கொண்டு சமூக உருவாக்கச் செயற்பாடும் இடம்பெற்றதைக் குறிப்பிடலாம்.

- மதீனா வாழ்க்கையில் சமூக உருவாக்கப் பின்னணியில் பல முக்கிய அம்சங்கள் காணப்பட்டன.

- தனிநபர்களிடையே ஒத்த தன்மை, அவர்களை ஒற்றுமைக்கும் சிறந்த ஆளுமைமிக்க தலைமைத்துவம், சுதந்திரமாகச் செயற்படக்கூடிய வகையிலமைந்த பிரதேசம் என்பன சமூக உருவாக்கத்துக்குச் சாதகமான காரணிகளாக அமைந்தன.

Department of Examinations - Sri Lanka

- நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய சமூக அமைப்பு நன்கு திட்டமிட்ட அடிப்படையில் அமைந்திருந்தது. குற்றங்கள் குறைந்த நீதியான ஒரு சமூக அமைப்புக்கு அவர்கள் வித்திட்டார்கள். மக்காவில் வைத்து மதீனா வாசிகளைச் சந்தித்த போது செய்த முதலாவது அகபா உடன்படிக்கையில் இதனைத் தெளிவாகக் காண முடிகின்றது.

- அதனைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்களின் தூதுவராகப் பிரசாரப் பணிக்கு மதீனாவுக்கு முஸ்அப் இப்னு உமைர் (ரழி) அவர்கள் சென்று அங்குள்ள உண்மையான நிலவரத்தை அறிந்து, மதீனாவின் பௌதிக ரீதியான விடயங்களை அவதானிக்கவும் முடிந்தது.

- இரண்டாவது அகபா உடன்படிக்கையின் போது நபி (ஸல்) அவர்களின் தலைமைத்துவத்தை ஏற்று அவரைப் பாதுகாப்பதற்கான உத்தரவாதம் கிடைத்தது.

- இறுதியாக மதீனாவுக்கு நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்றதும் மஸ்ஜித் நபவியை நிர்மாணித்தமை அங்குள்ள சமூகத்தை ஒன்று படுத்துவதற்கும் வழிகோலியது.

- அது மாத்திரமன்றி நபி (ஸல்) அவர்கள் தனது வேட்கையாக இருந்த சமூக உருவாக்க சிந்தனையை அமுல்படுத்துவதற்குச் சமூகத்துடன் இணைந்து அதற்கு வடிவம் கொடுத்தார்கள். சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக 10 ஆண்டுகளைத் திட்டமிட்டு செலவிட்டார்கள். இதுவும் சமூக வாழ்வின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

- இஸ்லாம் என்ற கொள்கையை வாழ்வில் எடுத்து நடக்கும் போது பல்வேறு தவறுகள், குறைபாடுகள் என்பன நிச்சயம் இடம்பெறுவது வழக்கம். இவற்றைச் சரிப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் சமூக வாழ்வின் ஊடாகச் சாத்தியப்படும்.

- நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப் பின்னர் தோன்றிய சிக்கலான நிலைமையின் போது தனிநபர்கள் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கியமையைக் காணலாம்.

**(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்)**

(ii) **இஸ்லாமிய சமூக அமைப்பின் சிறப்பம்சங்களுள் சமத்துவம் சகோதரத்துவம் பற்றி விபரிக்குக.**

- சமத்துவம் என்ற சொல்லுக்கு அறபியில் "முஸாவா" என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது.

  "ஒன்றைப் போல் மற்றொன்று ஒரே மாதிரியானது என்ற கருத்தைத் தவிர்த்து, அல்லாஹ்வின் முன்னிலையில் அனைவரும் சமம் என்ற கருத்தையே கொள்ள வேண்டும்." - கலாநிதி ஹமுதா அப்துல் அதீ.

- அல்-குர்ஆனும் ஸுன்னாவும் இஸ்லாத்தின் சமத்துவக் கோட்பாட்டை மிகத்தெளிவாக முன்வைக்கின்றன.

- இஸ்லாம் முழு மனித இனத்தையும் ஒரே தாய் தந்தையின் பிள்ளையாக நோக்குகிறது. பல காரணங்களால் பிரிந்து நின்ற போதிலும் அனைவரும் ஒரே மூலத்திலிருந்து

Department of Examinations - Sri Lanka

தோன்றியதாக கூறுகிறது. "மனிதர்களே நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்து தான் படைத்தோம்" (49:13)

- மனிதனில் இஸ்லாம் மனிதத்தையே காண்கின்றது. மனித தேவை, மனித இயல்பு, மனிதப் பிரச்சினைகள் என்பவற்றையே முதன்மைப்படுத்துகின்றது. மொழி, நிறம், நாடு, இனம், கோத்திரம், வட்டாரம், குலம், சாதி என்பவை மனிதனை தராதரப்படுத்துவதற்கும் வகை பிரிப்பதற்குமான அளவுகோல்களாக இஸ்லாம் கையாள்வதில்லை.

- நிறத்தால், இனத்தால், குலத்தால், கோத்திரத்தால் மனிதர்கள் பிரிந்து பிளவுபட்டு ஒருவரை யொருவர் எதிரிகளாய் பார்ப்பதை இஸ்லாம் ஏற்பதில்லை. இதனை வலியுறுத்தியே நபி (ஸல்) அவர்கள், தனது "ஹஜ்ஜதுல் விதா" அரபா பேருரையின் போது சமத்துவக்கோட்பாட்டை முன்வைத்தார்கள்.

- "மக்களே! உங்களது இறைவன் ஒருவனே! உங்கள் ஆதித் தந்தையும் ஒருவரே, நீங்கள் அனைவரும் ஆதமின் சந்ததியினர். ஆதமோ மண்ணினால் படைக்கப்பட்டவர். அறிந்து கொள்ளுங்கள் ஓர் அறபிக்கு அறபியல்லாதவர் மீதோ, அறபியல்லாதவருக்கு அறபியின் மீதோ, சிவப்பு நிறத்தவருக்கு கறுப்பு நிறத்தவர் மீதோ, கறுப்பு நிறத்தவருக்கு சிவப்பு நிறத்தவர் மீதோ எந்த வழியிலும் மேன்மையோ, சிறப்போ கிடையாது. நிச்சயமாக உங்களில் மேலானவர், அல்லாஹ்வின் மீது அதிக அச்சம் கொண்டவரே" (முஸ்லிம்)

- அபூதர் (ரழி) அவர்கள், பிலால் (ரழி) அவர்களைப் பார்த்து "கறுப்பியின் மகனே" என விளித்தபோது, அபூதர் (ரழி) அவர்களிடமிருந்து "இன்னும் ஜாஹிலிய்யாக் குணம் நீங்கவில்லை" என நபியவர்கள் கூறியமை. எனவே இனம், மொழி, நிறம், பிரதேசம் போன்ற வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளாத மார்க்கம்.

- 23 வருட கால நபிகளாரின் சமூக உருவாக்கத்தில் ரோமைச் சேர்ந்த ஸுஹைபும், பாரசீக ஸல்மானும், அபீஸீனிய பிலாலும் அறபு நாட்டு அறபிகளும் ஒரே அவையில் ஒன்றாகவும், சமத்துவமாகவும் அமர முடியுமான நிலை ஏற்பட்டமை.

- இஸ்லாம் வலியுறுத்தும் சமத்துவம் ஒரு முஸ்லிமின் வாழ்வில் நாளாந்தம், வாராந்தம், வருடாந்தம் என நடைமுறைப்படுத்தப்படும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

  உதாரணமாக தொழுகை, ஹஜ் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

- இஸ்லாமிய வரலாற்றில் மாத்திரமே நீதியில் சமத்துவம் சிறப்பாகப் பேணப்பட்டுள்ளது. இஸ்லாமிய நீதிமன்றில் கலீபாவும் குற்றவாளியும் நிறுத்தப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது.

- மஸ்ஜிதுந்தபவி நிர்மாணத்தின்போது நபி (ஸல்) அவர்களும் இணைந்து மண் சுமந்து, கல் சுமந்து மஸ்ஜிதுன் நபவியின் நிர்மாணப்பணிகளை மேற்கொண்டார்கள். இதன் மூலம் சமத்துவத்தை நபியவர்கள் பிரயோகத்தில் காண்பித்தார்கள்.

Department of Examinations - Sri Lanka

**சகோதரத்துவம்**

- இஸ்லாமிய சகோதரத்துவம் கொள்கை வழி சார்ந்தது. “ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரனாவார். அவர் மற்றவருக்கு அநியாயம் செய்யமாட்டார். (அநிய-ாயகார ரிடம்) அவரை ஒப்படைக்கவுமாட்டார். யார் தனது சகோதரனின் தேவையை கவனிக்கிறாரோ அவரின் தேவையை அல்லாஹ் கவனிக்கின்றான். யார் ஒரு முஸ்லிமின் கஷ்டத்தை நீக்குகிறாரோ அவரது கஷ்டங்களிலொன்றை அல்லாஹ் (மறுமையில்) நீக்கு கிறான். யார் ஒரு முஸ்லிமின் குறையை மறைக்கிறாரோ அல்லாஹ் மறுமையில் அவரது குறையை மறைப்பான்.” (புஹாரி)

- சகோதரத்துவத்தினை ஈமானோடு தொடர்புபடுத்தி நபியவர்கள் குறிப்பிட்டார்கள், “நீங்கள் ஈமான் கொள்ளும் வரையில் சுவர்க்கம் நுழைய மாட்டீர்கள். பரஸ்பரம் அன்பு கொள்ளும் வரையில் ஈமான் கொண்டவராக ஆக மாட்டீர்கள்” (முஸ்லிம்)

- இஸ்லாமிய சமூகம் சகோதரத்துவத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட ஒன்றாகும் எனவே தான், மதீனாவுக்கு சென்றதும் தோழர்கள் மத்தியில் சகோதரத்துவ உறவை நபி (ஸல்) அவர்கள் ஏற்படுத்தினார்கள்.

- சகோதரத்துவத்தை வளர்க்க ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய ஆறு கடமை களை வலியுறுத்தினார்கள். “ஒரு முஸ்லிமுக்கு இன்னொரு முஸ்லிம் மீதுள்ள கடமை 6 ஆகும். (முஸ்லிம்)”

- ஸகாத், ஸதகா, ஹிபத் போன்றனவும் சகோதரத்துவத்தை வளர்ப்பதற்கான வழிகளாக அறிமுகப்படுத்தியமை.

- சகோதரத்துவத்தை ஈமானுடன் இணைத்தும், சகோதரத்துவத்தி-ற்கு களங்கம் ஏற்படுகின்ற விசயங்கள் நடந்துவிட்டால் அதைத் தீர்-த்து வைக்கவும் கட்டளையிடுகிறது. “நிச்சயமாக மு.ஃமின்கள் (யாவரும்) சகோதரர்களே! ஆகவே, உங்கள் இரு சகோதரர்களுக்கிடையில் நீங்கள் இணக்கத்தை ஏற்படுத்திவிடுங்கள்” (அல்-குர்ஆன் 49:10).

- “மூன்று நாட்களுக்கு மேல் ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுடன் கோபித்தலாகாது” (புஹாரி, முஸ்லிம்)

- இஸ்லாம் மு.ஃமினை நேசிப்பதற்கு அறிவுரை கூறுகின்றது. “ஒரு மு.ஃமின் தான் விரும்பு-வதை இன்னொரு மு.ஃமினுக்கு விரும்பாதவரை அவன் உண்மையான விசுவாசியாக மாட்டான்” (முஸ்லிம்).

- நட்பு உலகாயத நோக்கங்களுக்கல்லாமல் அல்லாஹ்வுக்காக அமைதல் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றமை. “அல்லாஹ்வுக்காகவே நட்புக்கொள்ளுங்கள் அல்ல-ாஹ்வுக்காகவே ஒருவனை வெறுத்து நடங்கள்” (அஹ்மத்)

**(இரு தலைப்புக்களையும் மையப்படுத்தி இவைபோன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

5. (i) **இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகளுள் ஐந்தை அடையாளப்படுத்தி விளக்குக.**
**(10 புள்ளிகள்)**

(ii) **ஒரு முஸ்லிமின் வாழ்வை நெறிப்படுத்துவதில் மஸ்ஜித் வகிக்கும் பங்கினை விபரிக்குக.**
**(10 புள்ளிகள்)**

(i) **இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகளுள் ஐந்தை அடையாளப்படுத்தி விளக்குக.**

*01. உயிர் வாழ்வதற்கான உரிமை:*

*"தரித்திரத்துக்காக உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்..." (17:31)*

*"எந்த மனிதனையும் நியாயமின்றி கொலை செய்யாதீர்கள்..." (6: 151)*

*வாழ்வதற்குரிய உரிமையை மறுப்பது ஷிர்க்குக்கு அடுத்த மிகப் பெரிய பாவச்செயலுமாகும்.*

*02. உயிர், உடமையைப் பாதுகாத்துக் கொள்கின்ற உரிமை:*

*"எவனொருவன் மற்றொருவனை அநியாயமாகக் கொலை செய்கின்றானோ அவன் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவன் போலாவான்..." (5:32)*

*அந்த வகையில் நோய், காயப்படல், பசி, பட்டினி, நீரில் மூழ்குதல் போன்ற மரணத்துக்கு இட்டுச் செல்லும் செயல்களிலிருந்து காப்பாற்றுவதும் இதில் அடங்குகின்றது.*

*03. கற்பைக் காத்துக்கொள்ளும் உரிமை:*

*"(விசுவாசிகளே) நீங்கள் விபசாரத்திற்கு நெருங்கவும் வேண்டாம். ஏனென்றால் அது மானக்கேடான தாகவும், தீய வழியாகவும் இருக்கின்றது". (17:32)*

*நபி (ஸல்) அவர்கள் தனது "ஹஜ்ஜதுல் விதா" பிரசங்கத்தில் ஒவ்வொருவரதும் கற்பு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள்.*

*04. அடிப்படை வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை:*

*"அவர்களுடைய பொருள்களில் (வாய்திறந்து) யாசகம் கேட்போருக்கும் கேட்காதோருக்கும் பாகமுண்டு" (51:19)*

*ஒரு மனிதனின் அடிப்படை வாழ்க்கைத் தேவைகளான உணவு, உடை,உறையுள், மருத்துவம், கல்வி ஆகியவற்றைக் கேட்டுப் பெறும் உரிமை உண்டு. யாருமே உதவாத போது ஆட்சித் தலைவர் அப்பணியை நிறைவேற்ற வேண்டும்.*

*05. சமத்துவ உரிமை:*

*"மனிதர்களே நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்துதான் சிருஷ்டித்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்..." (49: 13)*

*எந்த அறபியும் அஜமியை விட மேலானவரல்லர். எந்த அஜமியும் அறபியை விட மேலானவரல்லர். அனைவரும் ஆதமின் மக்களாவர். ஆதம் மண்ணால் படைக்கப்பட்டவர். (பைஹகி)*



Department of Examinations - Sri Lanka

06. தனி மனித உரிமை:

"மூன்று மனிதர்களுக்கெதிராக நான் மறுமையில் வாதிடுவேன். அவர்களுள் ஒருவர் மனிதர்களை அடிமைப்படுத்தி அவர்களை விற்று அந்தப்பணத்தில் சாப்பிடுபவர்". (புஹாரி)

ஒருவர் செய்த குற்றத்திற்காக மற்றொருவர் தண்டிக்கப்படுவதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமையை இஸ்லாம் வழங்குகிறது.

"ஒருவரின் சுமையை மற்றொருவர் சுமக்கமாட்டார்." *(6:164)*

07. நீதி கோரும் உரிமை:

"விசுவாசிகளே நீதத்தை நிலை நாட்டுவதில் அல்லாஹ்வுக்காக நீங்கள் உறுதியான சாட்சிகளாக இருங்கள். மக்களில் ஒரு சாரார் மீதுள்ள துவே'ம் (அவர்களுக்கு) அக்கிரமம் செய்யும்படி உங்களைத் தூண்டாதிருக்கவும் (எவ்வளவு குரோதமிருந்த போதிலும்) நீங்கள் நீதியே செலுத்துங்கள்..." *(5:18)*

08. மனித கௌரவத்தைப் பாதுகாக்கும் உரிமை:

"மு.்.மின்களே! ஒரு சமூகத்தார் பிறிதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண் டாம். ஏனெனில் (பரிகசிக்கப்படுவோர்), அவர்களைவிட மேலானவர்களாக இருக்கலா ம். (அவ்வாறே) எந்தப் பெண்களும், மற்றெந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்). - ஏனெனில் இவர்கள் அவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம். இன்னும், உங்களில் ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள், இன்னும் (உங்க-ளில்) ஒருவரையொருவர் (தீய) பட்டப்பெயர்களால் அழைக்காதீர்கள். ஈமான் கொண்ட பின் (அவ்வாறு தீய) பட்டப் பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும் எவர்கள் (இவற்றி லிருந்து) மீளவில்லையோ, அத்தகையவர்கள் அநியாயக்காரர்கள் ஆவார்கள்". *(49:11)*

09. தனிப்பட்ட வாழ்வில் கண்ணியத்தைப் பாதுகாக்கும் உரிமை:

"விசுவாசிகளே சந்தேகங்களில் இருந்து அனேகமாக நீங்கள் விலகிக் கொள்ளுங்கள் ஏனெனில் சில விடயங்களில் சந்தேகிப்பது பாவமாக இருக்கின்றது. (எவருடைய குற்ற-த்தையும்) நீங்கள் துருவித் துருவி விசாரித்துக் கொண்டிருக்க வேண்டாம்". *(49:12)*

10. கருத்துச் சுதந்திரம் :

"இவர்களுக்கு நாம் பூமியில் ஆட்சியதிகாரம் வழங்கினால் நல்லதைச் செய்ய ஏவுவா-ர்கள். தீயதைவிட்டும் தடுப்பார்கள்". *(22:41)*

"உங்களில் யாராவது ஒருவர் ஒரு தீமையைக் கண்டால் அதனைத் தனது கரத்தால் தடுக்கவும். முடியாவிட்டால் நாவினால் தடுக்க வேண்டும். அதற்கும் முடியாவிட்டால் தனது உள்ளத்தினாலாவது வெறுக்கட்டும். இது ஈமானின் மிகக் குறைந்த படித்தரமாகும்" (முஸ்லிம்)

Department of Examinations - Sri Lanka

11. வழிபாட்டுரிமை:

*"(இஸ்லாம்) மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை. வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகி விட்டது" (2:256)*

12. கொடுங்கோன்மைக்கு எதிராகக் குரல்கொடுக்கும் உரிமை:

கொடுங்கோல் ஆட்சியாளனுக்கெதிராகக் குரல் கொடுக்கும் உரிமை, ஒரு குடிமகனுக்கு இருக்கிறது. அநீதி, அராஜகம், நீதியற்ற நிலை தொடர்ந்தும் காணப்படுகின்ற போது பாதிக்கப்பட்டோர், நிர்க்கதிக்குள்ளானோர் அவ்வாட்சிக்கெதிராக குரல்கொடுக்க இஸ்லாம் உரிமையை வழங்குகிறது.

*"அக்கிரமத்துக்கு உள்ளானவர்கள் தவிர (மற்றெவரும் யாவரைப் பற்றியும் பகிரங்கமாகத்) தீய வார்த்தைகளைக் கூறிக் கூச்சலிடுவதை அல்லாஹ் விரும்புவதே இல்லை". (4:148)*

*"அநியாயக்கார ஆட்சியாளனுக்கு முன்னால் சத்தியத்தை முன்வைப்பது அறப் போராட்டங்களில் மிக உயர்ந்ததாகும்" (ஹதீஸ்)*

13. அரசியல் விவகாரங்களில் பங்கு கொள்ளும் உரிமை:

*"அவர்களுடைய ஒவ்வொரு காரியத்தையும் தங்களுக்குள் கலந்தாலோசிப்பார்கள்" (24:55)*

**(மேலுள்ள விடயங்களோடு தொடர்புபடுத்தி 5 கருத்துக்கள் விளக்கப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்)**

(ii) **ஒரு முஸ்லிமின் வாழ்வை நெறிப்படுத்துவதில் மஸ்ஜித் வகிக்கும் பங்கினை விபரிக்குக.**

- மஸ்ஜித் ஒரு முஸ்லிமின் ஆன்மீக, கல்வி, பொருளாதாரம், ஆரோக்கியம், பண்பாடு, ஒழுக்கம் போன்ற பல துறைகளாலும் நெறிப்படுத்தப்பட்ட, சமூகத்தை வழிநடாத்தும் ஆளுமையுள்ளவர்களை உருவாக்குகின்றது.

- வாராந்த, வருடாந்த, விஷேட போதனைகள் மூலம் ஒரு மு:.மினது ஒழுக்க வாழ்வை நெறிப்படுத்துகின்றது.

- ஒரு முஸ்லிம் பள்ளிவாசலின் அழைப்புக்கு பதில் அளிப்பதனூடாக நேர முகாமைத்துவத்திற்கு பயிற்றுவிக்கபடுகின்றான்.

- பள்ளிவாசல் நிர்வாக சபைகளினூடாக குறித்த கிராமத்து முஸ்லிம்களின் நடத்தைகள் அவதானிக்கப்படுவதோடு, அதில் தவறுகள் இடம்பெறுகின்ற போது அவை சீர்திருத்தப்படுகின்றமை.

- ஒரு முஸ்லிமின் ஈமான் பலப்படுத்தப்படுவதற்கு பள்ளிவாசல் காரணமாக அமைகிறது.



Department of Examinations - Sri Lanka

"ஒரு மனிதன் மஸ்ஜிதுக்கு செல்வதை வழமையாகக் கொண்டிருப்பதைக் கண்டால் அவன் ஈமானை பெற்றிருக்கின்றான் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்" (திர்மதி)

- பள்ளிவாசல் ஒரு முஸ்லிமை சுவன வாழ்வின் பக்கம் ஆர்வமூட்டுகிறது.

  மஹ்ஷரில் எந்த நிழலும் இல்லாத அந்நாளில் அல்லாஹ்வின் அர்ஷின் கீழ் நிழல் பெறும் பேற்றை ஏழு தொகுதியினர் பெற்றுக் கொள்வர். மஸ்ஜிதுடன் இறுக்கமான தொடர்பு கொண்டு இருந்தவர்களும் ஒரு தொகுதியினராவர். (புகாரி)

- தலைமைத்துவத்துக்கான பயிற்சியை வழங்கி அவனை வலுப்படுத்துகின்றது.

  நபி (ஸல்) அவர்களது காலத்தில் மஸ்ஜிதுன் நபவி சஹாபாக்களை உடல், உள ரீதியாக பயிற்றுவிக்கும் இடமாக காணப்பட்டது.

- பள்ளிவாசலில் இடம்பெறும் போதனைகள் ஒரு முஸ்லிமிடம் அடுத்தவர்களின் துயர் துடைப்பதற்கான மனப்பாங்கை வளர்க்க வழி செய்கின்றது. (பிரச்சினைகளைத் தீர்த்தல்)

- மஸ்ஜித்கள் ஊடாக நடாத்தப்படும் குர்ஆன் மத்ரஸாக்கள் மூலம் சிறுவயது முதலே பிள்ளைகள் பயிற்றுவிக்கப்படுவதனூடாக தனிமனித உருவாக்கத்திற்கான அடித்தளமாக மஸ்ஜித் அமைகின்றது.

- அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையிலான தொடர்பை பேணும் இடமாக மஸ்ஜித் காணப்படுகின்றமையால் இறைதொடர்புடன் ஒருவன் வாழ்வதற்கு மஸ்ஜித் துணை நிற்கிறது.

- பள்ளிவாயலில் கூட்டாக சில செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதனூடாக (ஸகாத், உழ்ஹிய்யா, ஸகாதுல் பித்ரா) ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுடன் ஒற்றுமையாக வாழ்வதற்கான மனோபாவம் உருவாவதைத் தூண்டுகிறது.

- வறுமை ஒழிப்பு (ஸகாத்) செயற்பாடுகள் மூலம் களவு, சுரண்டுதல் போன்ற தீய தனி மனித நடத்தைகளிலிருந்து குறித்த முஸ்லிம் நெறிப்படுத்தப்படுகின்றமை.

- மொத்தத்தில் பள்ளிவாயல் ஒரு மத்திய நிலையமாக செயற்படுவதனூடாக ஒரு முஸ்லி-மின் லௌகீக ஆன்மீகத் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டு பூரண ஆளுமையுள்ள மனிதனாக வாழ மஸ்ஜித் வகை செய்கிறது.

**(இவை போன்ற 5 கருத்துக்கள் விளக்கமாக எழுதப்பட்டிருப்பின் 5 x 2 = 10 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

6. (i) **இஸ்லாத்தில் இஜ்திஹாத் பெறும் முக்கியத்துவத்தை அல்குர்ஆன், ஸுன்னா ஆதாரங்களுடன் விளக்குக.** **(10 புள்ளிகள்)**

(ii) **இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக விளக்கி பிக்ஹூத் துறை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புக்களை விபரிக்குக.** **(10 புள்ளிகள்)**

(i) **இஸ்லாத்தில் இஜ்திஹாத் பெறும் முக்கியத்துவத்தை அல்குர்ஆன், ஸுன்னா ஆதாரங்களுடன் விளக்குக.**

தற்காலத்தில் இஜ்திஹாதின் முக்கியத்துவத்தை பற்றி ஆராய்கின்றபோது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

1. அல்-குர்ஆன், ஸுன்னா என்பனவற்றிலிருந்து சட்ட வசனங்களை பிரித்து இனங்கண்டு கொள்வதற்கு இஜ்திஹாத் இன்றியமையாதது.

2. அல்-குர்ஆன் ஹதீஸில் நேரடித் தீர்வு இல்லாத நவீனப் பிரச்சினைகளுக்கு இஜ்திஹாதின் மூலம் தீர்வு காண்பதற்கு தற்காலத்தில் இஜ்திஹாத் தேவைப்படுகின்றது.

3. சட்ட வசனங்களிலிருந்து சட்ட விதிகளை வகுத்துக் கொள்ள பொருத்தமான வசனங்களை அறிந்து கொள்வதற்கு அது அவசியமாகின்றது.

4. பல கருத்துகளுக்கு இடம்பாடான வசனங்களில் மிகப் பொருத்தமான வசனத்தைத் தெரிவு செய்வதற்கு துணை செய்கின்றது.

5. காலமாற்றத்தினாலும், மனித சிந்தனையின் அபிவிருத்தியினாலும் அவ்வப்போது எழும் சமய, சமூக, அரசியல், பொருளாதார ரீதியிலான மாற்றங்களினாலும் ஏற்படும் புதிய பிரச்சினைகளில் இஸ்லாத்தின் நிலைப்பாட்டை விளக்கி வைப்பதற்கு இஜ்திஹாத் அவசியப்படுகின்றது.

6. தற்கால முஸ்லிம் சமூகம் வேண்டி நிற்கும் சீர்திருத்த முயற்சிகளை மேற்கொள்வதற்கு இஜ்திஹாத் அவசியம்.

7. தற்கால விஞ்ஞான முன்னேற்றம், சமூக மாற்றங்கள் என்பனவற்றுக்கு ஏற்ப உருவாகும் நவீன பிரச்சினைகளுக்கு இஸ்லாத்தின் தீர்வு இஜ்திஹாதினூடாகவே முன்வைக்கப்பட வேண்டியுள்ளது. (உதாரணம்: பரிசோதனைக் குழாய்க் குழந்தை)

8. இஸ்லாத்தில் ஹலால் எது? ஹராம் எது? என்ற விடயங்கள் தெளிவாக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டிக்கும் உட்படாத விடயங்கள் பற்றிய தெளிவினைப்பெற இஜ்திஹாத் அவசியப்படுகின்றது.

9. இஸ்லாத்தின் உயிரோட்டத்திற்கும் இஜ்திஹாத் தற்காலத்தில் தேவைப்படுகின்றது.

10. இஸ்லாமிய ஆட்சி அல்லாத முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழுகின்ற நாடுகளில், பிரதேசங்களில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்க இஜ்திஹாத் தற்காலத்தில் தேவைப்படுகின்றது.

Department of Examinations - Sri Lanka

இவை தொடர்பான அல்குர்ஆன் ஆதாரங்கள்:

- “மேலும் அமைதியோ அல்லது பீதியோ பற்றிய யாதொரு செய்தி அவர்களுக்கு வந்து விட்டால் உடனே அவர்கள் அதை பரப்பி விடுகிறார்கள். அவர்கள் அதை (அல்லாஹ்வின்) தூதரிடமோ, அல்லது அவர்களில் உள்ள அதிகாரிகளிடமோ தெரிவித்தால், அவர்களிலிருந்து அதை ஊகித்து அறியக்கூடியவர்கள், அதை நன்கு விசாரித்தறிந்து கொள்வார்கள்” *(04:83)*

- “அன்றியும் தம் விடயங்களை தமக்கிடையே கலந்தாலோசித்துக் கௌ்வர்” *(42:38)*

இவை தொடர்பான ஹதீஸ் ஆதாரங்கள்:

- “சட்ட அறிஞர் ∴ தலைவர் இஜ்திஹாத் செய்து சரியான முடிவைப் பெற்றால் அவருக்கு இரண்டு நன்மை கள் உண்டு. அவரது முடிவு பிழையாக அமைந்து விட்டால் அவருக்கு ஒரு நன்மை உண்டு” (புஹாரி)

- “எனது உம்மத் வழி கேட்டில் ஒன்று படாது” (திர்மிதி)

- யெமன் பிரதேசத்திற்கு நபியவர்கள் முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்களை தனது பிரதிநிதியாக நபியவர்கள் அனுப்ப தயாரானபோது அவருக்கு இஜ்திஹாத் மேற்கொள்ள அனுமதி வழங்கியமை.

**(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் ஆல்குர்ஆன், அல்ஹதீஸ் ஆதாரங்களுடன் விளக்கியிருப்பின் 2 x 5 = 10 புள்ளிகள்)**

(ii) **இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக விளக்கி பிக்ஹூத் துறை வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புக்களை விபரிக்குக.**

- முழுப்பெயர்: அபூ அப்துல்லா அஹ்மத் இப்னு முஹம்மத் ஹன்பல்

- பிறப்பு: ஹி *164* இல் பக்தாதில் இறப்பு: *241*இல்

- இமாமவர்கள் வாழ்ந்த காலம் தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், மொழி, அறபு இலக்கியம் போன்ற துறைகள் வளர்ச்சியுற்றிருந்தன.

- அஹ்லுர் ர∴யி மற்றும் அஹ்லுல் ஹதீஸ் ஆகிய இரு வழிமுறைகளையும் பின்பற்றி ஷரீஆவைக் கற்றுக் கொண்டார்கள்.

- ஆசிரியர்கள்: இப்றாஹிம் இப்னு ஸ∴து, இமாம் யூசுப், ஹசீம் பின் பசீர், இமாம் ‘ஙபிஈ, சுப்யான் பின் உயைனா, யஹ்யா அல் கத்தாம்.



Department of Examinations - Sri Lanka

- மு∴தஸிலா கோட்பாட்டை ஏற்க மறுத்ததன் காரணமாக கலீபா ம∴மூனால் துன்புறுத்தப்பட்டார்கள். இதனால் இமாவர்கள் “இமாமுல் மும்தஹன்” (அதிகம் சோதிப்பட்ட இமாம்) என்று அழைக்கப்டுகிறார்கள்.

பிக்ஹுத் துறைக்கான இமாமவர்களின் பங்களிப்புக்கள் :

- அவர் ஏக காலத்தில் ஒரு முஹத்திஸாகவும் பகீஹாகவும் இருந்தார்கள்.

- இவர் பிக்ஹுத் துறையில் முன்னைய இஸ்லாமிய அறிஞர்களின் வழிமுறையையே கடைபிடித்தார்.

- அவரது சட்ட மூலாதாரங்கள்:

  - அல்-குர்ஆன் - அஸ்-ஸுன்னா - ஸஹாபாக்களது இஜ்மா - ஸஹாபாக்களது கருத்துக்கள் - கியாஸ்

- அப்துல் வஹ்ஹாப் அல்வர்ராக் என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ”நான் அஹ்மத் இப்னு ஹன்பலைப் போன்று எவரையும் கண்டதில்லை. அவரிடம் அறுபதாயிரம் சட்டப் பிரச்சினைகள் கேட்கப்பட்டன. அவை அனைத்துக்கும் “ஹத்தஸனா” (எங்களுக்குக் கூறினார்,) “அஹ்பரனா” (எங்களுக்கு அறிவித்தார்) என்றே பதிலளித்தார்.”

- இமாம் அவர்கள் பெருந்தொகையான சட்டப் பிரச்சினைகளுக்கு விளக்கம் அளித்துள்ளமை அவை அறுபதாயிரம் எனக் கூறப்பட்டுள்ளது.

- உலகின் நாலா பக்கங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்காண மக்கள் அவரை அணுகி பெருந்தொகையான பிரச்சினைகளுக்கு சட்டத் தீர்ப்புகளை பெற்றுச் சென்றனர்.

- இமாமவர்களின் பிக்ஹு சட்டத் தீர்ப்புக்கள், ஹதீஸ்களையும் தூய இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துக்களையும் செய்திகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்தன.

- இமாமவர்களது மாணவர்களின் மாணவரான அபூபக்ர் அல்-கலாம் என்பவரின் முயற்சியினாலேயே இவர்களது கருத்துக்கள் உலகிற்குக் கிடைத்தன.

- இவர்களின் சிந்தனைகள் இவரது புதல்வர்களான ஸாலிஹ், அப்துல்லாஹ் ஆகியோரால் தொகுக்கப்பட்டன. அவையே “மஸாஇல் ஸாலிஹ்” என்றும் “முஸ்னத்” என்றும் அழைக்கப்படுகின்றன.

- கிதாபுஸ் ஸுனன் இமாமவர்களள் எழுதிய நூலாகும்

- இமாமவர்களின் சிந்தனைகள் ஹன்பலி மத்ஹபாக வளர்ச்சி கண்டது.

**(வாழ்க்கை வரலாறு தொடர்பாக ஐந்து கருத்துக்களும் பிக்ஹுத்துறை பாங்களிப்புக்கள் ஐந்தும் விளக்கப்பட்டிருப்பின் 5 +5 = 10 புள்ளிகள்)**



Department of Examinations - Sri Lanka

7. (i) **இலங்கை வரலாற்றில் சிங்கள மன்னர்கள் முஸ்லிம் சமூகத்தோடு கொண்டிருந்த நட்புறவையும் தொடர்பினையும் உதாரணங்களுடன் விளக்குக.** **(10 புள்ளிகள்)**

(ii) **இலங்கை முஸ்லிம்களது வரலாற்றில் பின்வருவனவற்றின் தொடர்பை ஆராய்க.**
**(அ) மாந்தைத் துறைமுகம் (ஆ) இப்னு பதூதா** **(10 புள்ளிகள்)**

(i) **இலங்கை வரலாற்றில் சிங்கள மன்னர்கள் முஸ்லிம் சமூகத்தோடு கொண்டிருந்த நட்புறவையும் தொடர்பினையும் உதாரணங்களுடன் விளக்குக.**

- *மன்னர்களுடனான நட்புறவும் தொடர்புகளும்:*

- *மன்னர்கள் முஸ்லிம்களுடன் சிநேகபூர்வ உறவை வைத்திருந்தனர்.*

  *மன்னனின் அனுசரனையுடன் முஸ்லிம்கள் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டமை.*

- *மன்னனின் அரச நிருவாகத்தில் முஸ்லிம்கள் பங்குகொண்டிருந்தமை.*

  *கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனின் (கி.பி. 1747-1782) ஆட்சிக் காலத்தில், ஷேக் ஆலிம் என்பவர் "மடிகே பத்தே நிலேமேயாகக் கடமையாற்றியுள்ளார். அவருக்குப் பின் அவரது பேரரான ஷேக் அப்துல் காதர் என்பவரும் இப் பொறுப்பை வகித்துள்ளார்.*

- *வைத்திய சேவையில் முஸ்லிம் வைத்தியர்கள் கடமையாற்றியமை.*

  *கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் காலத்தில், "பெஹத்கே முஹாந்திரம் நிலமேயாகவும்", அரச சபை வைத்தியராகவும் செயற்பட்ட "வைத்திய திலக ராஜ கருண கோபால முதலிய" எனும் குடும்பப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டவராக 'ஷேக் முஹம்மது முதலி' என்பவர் விளங்கியுள்ளார்.*

- *மன்னர்களின் தூதுவர்களாகவும் முஸ்லிம்கள் கடமையாற்றியமை.*

- *கி.பி. 1283இல் இலங்கை மன்னன் எகிப்துக்கு அனுப்பிய தூதுக் குழுவுக்கு, 'அபூ உஸ்மான்' என்பவர் தலைமை தாங்கியமை.*

- *மன்னர்களின் அரச சபையில் முஸ்லிம்கள் இடம் பெற்றமை.*

- *சிங்கள மன்னர்களின் அரச சபையில் முஸ்லிம்கள் அமைச்சர்களாகவும், ஆலோசகர்களாகவும், பொறுப்பு வாய்ந்த பதவிகளையும் வகித்துள்ளார்கள் என 'அல்-இத்ரீஸி' என்னும் வரலாற்றாசிரியர் குறிப்பிடுகின்றார்.*

  *பொலன்னறுவைக் கால முதலாம் மன்னன் விஜயபாகுவின் முடிசூட்டு விழா ஏற்பாடுகளைச் செய்தவர் 'பெரிய தம்பி மரைக்காயர்' எனும் முஸ்லிம் பிரமுகராவார்.*

- *மன்னனது இராணுவப் படைகளில் முஸ்லிம்கள் முக்கிய பங்கு வகித்தமை.*

Department of Examinations - Sri Lanka

- இரண்டாம் இராஜசிங்கன் (கி.பி. 1635-1687) ஆட்சிக் காலத்தில், கண்டிப் படைகளில் முஸ்லிம்கள் அங்கத்துவம் வகித்துள்ளனர்ளூ கண்டியின் கடைசி மன்னனான ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் (கி.பி. 1798-1815) படையில் சுமார் 850 முஸ்லிம்கள் இருந்துள்ளனர் என அறியக் கிடைக்கிறது.

- நான்காம் விஜயபாகு (கி.பி. 1270) காலத்தில் “தாகூர்” எனும் முஸ்லிம் இராணுவ தளபதியாக செயற்பட்டு இராணுவப் புரட்சியை அடக்கி நாட்டைக் காத்த வரலாறு காணப்படுகிறது.

- மன்னனது அரச மாளிகைகளில் முஸ்லிம்கள் முக்கியத்துவம் பெற்றமை.

- ‘மடைப்பள்ளி’ என்று அழைக்கப்பட்ட அரச மாளிகையில் அரசனுக்குரிய உணவு தயாரிக்கும் இடத்தில் மடைப்பள்ளிச் சேவகர்களாகப் பணியாற்ற அனுமதிக்கப்படுவர். மாவில்மடையைச் சேர்ந்த பல முஸ்லிம்கள், மடைப்பள்ளிச் சேவகர்களாக நியமனம் பெற்றிருந்தமை, கண்டியரசன் முஸ்லிம் சமூகம் மீது வைத்திருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது அவ்வாறே, அரச குளியலறை அலுவல்களிலும் முஸ்லிம்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

- இலங்கையின் சுதந்திரத்தையும், சிங்கள அரசையும் பாதுகாக்க நடந்த போராட்டங்களில் முஸ்லிம்கள் பங்கேற்றமை.

- மாயதுன்னை சீதாவாக்கையைப் பொறுப்பெடுத்தபோது, முஸ்லிம்கள் மாயதுன்னை மன்னனுடன் சேர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டார்கள்ளூ இப்போராட்டங்களில், ஏ.எம். வாப்பிச்சி மரைக்கார், குஞ்சலி மரைக்கார் ஆகிய இரு வீரத் தளபதிகளும் கொல்லப்பட்டு, அவர்களின் தலைகள் போர்த்துகேயத் தளபதிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

**(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் எழுதி விளக்கப்பட்டிருப்பின் (5 x 2 = 10 புள்ளிகள்)**

(ii) **இலங்கை முஸ்லிம்களது வரலாற்றில் பின்வருவனவற்றின் தொடர்பை ஆராய்க.**

**(அ) மாந்தைத் துறைமுகம் (ஆ) இப்னு பதூதா (10 புள்ளிகள்)**

**(அ) மாந்தைத் துறைமுகம்:**

- இது வட மாகாணத்தில் தற்போதைய மன்னார் மாவட்டத்தில் அமைந்திருந்தது.

- இத்துறைமுக நகரம் கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையிலான வணிகத்தில் ஒரு மத்திய நிலையமாக விளங்கியது.

- கி.பி.7ஆம் நூற்றாண்டுகளில் அநுராதபுர ஆட்சியாளர்களின் காலத்தில் முக்கிய துறைமுக நகரமாக மாந்தை விளங்கியது.



Department of Examinations - Sri Lanka

- இத்துறைமுகம் செங்கடல், பாரசீக வளைகுடா, கிழக்காபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளுடன் இடம்பெற்ற பட்டுப்பாதை வர்த்தகத்தில் (Silk Rute) ஒரு முக்கிய துறைமுகமாக காணப்பட்டது.

- மாந்தைத் துறைமுகம் தொடர்பாக மகா வம்சத்திலும், தீப வம்சத்திலும் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

- தொல்பொருளியல் வரலாற்றில் முஸ்லிம்களது ஆரம்ப கால இருப்பை நிறுவுவதற்குரிய தடயங்களை தருவதில் முக்கிய நிலை வகிக்கும் துறைமுகமாகும்.

- இப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வுகளும், கண்டெடுக்கப்பட்ட அறபு பாரசீக நாணயங்களும், கல்வெட்டுகளும் அறபுக் குடியிருப்புக்கள் காணப்பட்டமைக்கான சான்றுகளாக அமைவதாக கலாநிதி ஷுக்ரி குறிப்பிடுகிறார்.

- மாந்தையிலும், அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட கி.பி. 8-11 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையிலான மத்திய கிழக்கு நாடுகளைச் சார்ந்த மட்பாண்டங்களும் சீனாவைச் சார்ந்த மட்பாண்டங்களும் இவ்வணிகத்தில் அறேபியா, சீனா (ஆகிய நாடுகள்) வகித்த பங்கை விளக்குகின்றன.

- இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின்போது கிடைக்கப்பெற்ற சடலங்கள், முஸ்லிம்களது அடக்கம் செய்யும் முறையை ஒத்ததாக காணப்பட்டமை தொன்மைக்கால முஸ்லிம் குடியேற்றங்களுக்கு சான்றாகும். (கிப்லா திசை நோக்கி தக்பீர் கட்டப்பட்ட நிலையில் அடையாளம் காணப்பட்டமை)

**(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)**

**(ஆ) இப்னு பதூதா**

- இவர் மொரோக்கோ நாட்டைச் சேர்ந்த ஒரு தேச சஞ்சாரி ஆவார்.

- கி.பி.1344 இல் இலங்கையைத் தரிசித்துள்ளார் என்பதனை அவரது பயணக் குறிப்புக்களிலிருந்து காண முடிகிறது.

- இவரது குறிப்புக்கள் 14 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் முஸ்லிம்கள் கரையோர நகர்களில் மாத்திரமன்றி உள்நாட்டுப் பகுதிகளிலும் வாழ்ந்தமைக்கான சான்றுகளைத் தருகின்றன.

- இலங்கையை தரிசித்த அவர், புத்தளத்திலிருந்து சிலாபம், குருநாகல், கம்பளை, வழியாக ஆதம் மலையைத் தரிசித்து இரத்தினபுரி, தெவுந்தர, காலி, கொழும்பு வழியாக புத்தளம் நோக்கித் திரும்பிச் சென்றுள்ளார்.



Department of Examinations, Sri Lanka

- இப்பயணப் பாதையில் தான் சந்தித்த பல முஸ்லிம் பெரியார்களைப் பற்றியும் அவர்களைச் சூழ இருந்த பள்ளிவாயில்கள், குடியிருப்புக்கள் பற்றியும் குறிப்பிடுகிறார்.

- காலியில் கப்பல் தலைவரான தாகூதா இப்றாஹீம் என்பவரது வீட்டில் தான் விருந்துபசாரத்தில் கலந்துகொண்டதாக குறிப்பிடுகிறார்.

- குருநாகலையில் மஸ்ஜித் கட்டப்பட்டு காணப்பட்டதாகவும் அதில் தொழுகை நடாத்தப்பட்டுக்கொண்டிருந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

- குருநாகலையில் 'ஷெய்க் சீராஸி' என்பவர் தனது பிள்ளைகளது உதவியுடன் ஆதம் மலைக்கு செல்வோருக்கு வழிகாட்டிக்கொண்டிருந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

- எனவே, இவரது வருகை தொன்மைக் கால முஸ்லிம்களது வரலாற்றுக்கு சான்று பகர்கின்றன.

**(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)**

8 **பின்வருவன பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.**

(i) **மறுமை வாழ்வு உண்டு என்பதற்கான ஆதாரங்கள்.** **(05 புள்ளிகள்)**

(ii) **இஸ்லாத்தில் சுவன வாழ்வு** **(05 புள்ளிகள்)**

(iii) **இஸ்லாத்தில் திருமண முன் ஆயத்தம்** **(05 புள்ளிகள்)**

(iv) **அரேபிய - இலங்கை உறவுகள்** **(05 புள்ளிகள்)**

(i) **மறுமை வாழ்வு உண்டு என்பதற்கான ஆதாரங்கள்.**

- நபி (ஸல்) அவர்கள் மறுமை நம்பிக்கை பற்றிக் கூறியபோது அது சாத்தியமற்ற ஒன்று என்று எண்ணியவர்கள் நபியவர்களைப் பரிகசித்தனர். குதர்க்க வினாக்களைத் தொடுத்தனர். அவற்றுக்கு அல்-குர்ஆன் தர்க்கரீதியாக பதில் கூறியது.

  உக்கிப்போன எலும்புத்துண்டைக் கொண்டுவந்து நபியவர்களிடம் இதை எப்படி உமது இறைவன் மீண்டும் எழுப்புவான் எனப் பரிகாசமாகக் கேட்டதற்கு அல்லாஹ் அல்-குர்ஆன் வசனங்களை இறக்கிப் பதில் கூறினான். "அவன் நமக்காக ஓர் உதாரணத்தையும் கூறுகின்றான் "எலும்புகள் அவை மக்கிப் போய் விட்ட பின் அவற்றை உயிர்ப்பிப்பது யார்?" என்று. "முதல் முதலில் அவற்றை உண்டு பண்ணியவனே (பின்னும்) அவற்றுக்கு உயிர் கொடுப்பான்." (36:77-83)

- பிறப்பும் இறப்பும் கொண்ட இவ்வுலக வாழ்க்கை என்பது காலத்தின் கோலம் என்று வாதிட்டவர்களுக்கு அல்-குர்ஆன் அவர்களது அறியாமையை சுட்டிக்காட்டியது. "நமது இந்த உலக வாழ்க்கையைத் தவிர வேறு (வாழ்க்கை) கிடையாது. நாம் இறக்கிறோம் ஜீவிக்கிறோம் "காலம்" தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை" என்று கூறுகிறார்கள் அவர்களுக்கு அது பற்றிய அறிவு கிடையாது - அவர்கள் (இது பற்றிக் கற்பனையாக) எண்ணுவதைத் தவிர வேறில்லை. (45:24)



Department of Examinations - Sri Lanka

- எந்த முன்மாதிரியும் இல்லாமல் முதலில் உலகைப் படைத்த அல்லாஹ்வுக்கு இரண்டாம் முறை அதனை உருவாக்குவது மிகவும் இலகுவானது என்றது. "அவனே படைப்பைத் துவங்குகின்றான் பின்னர் அவனே அதை மீட்டுகிறான் மேலும், இது அவனுக்கு மிகவும் எளிதேயாகும்." (30:27-28)

- மறுமையில் நம்பிக்கையற்றோர் அது எப்போது வரும் என்று நபியவர்களிடம் பரிகாசமாகக் கேட்டதற்கு அல்-குர்ஆன் பதில் கூறியது. "அதன் அறிவு நிச்சயமாக அல்லாஹ்விடமே இருக்கின்றது - எனினும் மனிதர்களில் பெரும்பாலோர் அதை அறிய மாட்டார்கள்". (79:42-46) (7:187)

- வரலாற்றில் மரணிக்கச் செய்து உயிர்ப்பித்த நிகழ்வுகள் பல இடம்பெற்றுள்ளமை.

  - அறுக்கப்பட்ட பசுவின் ஒரு துண்டால் கொலையுண்டவனின் சடலத்தில் அடித்ததும் உயிர் பெற்ற நிகழ்வு.

- மறுமை உண்டு என்பதற்கான பல்வேறு தர்க்கரீதியான சான்றுகளைப் பகுத்தறிவு முன்வைக்கின்றது.

  - ஒன்று இருப்பின் முடிவு ஒன்றும் இருக்கும் என்பது பொது விதியாகும்.
  - படைக்கும் சக்தி வாய்ந்த அல்லாஹ்வுக்கு அழிக்கும் சக்தியும் உண்டு.
  - அனைத்தும் அழியக்கூடியன என்பதை அறிவியல் ஏற்றுக்கொள்கிறது.

**(இவை போன்ற ஐந்து ஆதாரங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)**

(ii) **இஸ்லாத்தில் சுவன வாழ்வு**

- ஒரு முஸ்லிமின் உலக வாழ்வின் இறுதி இலக்கு சுவனமாகும்.

- உலக வாழ்வில் நன்மைகள் மிகைத்து இறை திருப்தியைப் பெற்ற மனிதர்களுக்காக சுவனங்கள் தயார் நிலையில் உள்ளன.

  "உங்கள் இறைவனிடமிருந்து கிடைக்கும் மன்னிப்புக்கும், வானங்கள் பூமியளவு விசாலமான சுவர்க்கத்திற்கும் விரையுங்கள். இறைவனை அஞ்சுவோருக்கு அது தயாரிக்கப்பட்டுள்ளது. (3:133)

  "எந்தக்கண்ணும் கண்டிராத, எந்தக்காதும் கேட்டிராத, எந்த உள்ளத்திலும் உதித்திராத இன்பங்களை என் நல்லடியார்களுக்காக நான் சுவர்க்கத்தில் தயார்படுத்தி வைத்திருக்கிறேன்" என்று, அல்லாஹ் கூறியதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி)

Department of Examinations - Sri Lanka

- சுவர்க்கத்தின் வாயில்கள்:

  *சுவர்க்கத்தில் பல வாயில்கள் உள்ளன.*

  சுவர்க்கத்தில் 8 வாயில்கள் உள்ளன. அதில் ''ரய்யான்" என்றழைக்கப்படும் வாயிலொன்று உள்ளது. அதில் நோன்பாளிகளைத் தவிர வேறெவரும் நுழைய மாட்டார்கள். (புஹாரி)

- சுவர்க்கத்தின் வரவேற்பாளர்கள்:

  ''உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும். நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். நிரந்தரமாக இருக்கும் நிலையில் இதில் நுழையுங்கள்" என்று கூறுவர்" (39:73)

- சுவர்க்கத்தின் மண்:

  ''என்னை சுவர்க்கத்துள் பிரவேசிக்கச் செய்யப்பட்டது. அங்கே முத்தாலான கழுத்தணிகளைக் கண்டேன். அதன் மண் (நறுமணம் மிக்க) கஸ்தூரியாக இருந்தது" (புஹாரி)

- சுவர்க்கத்தின் அரண்மனைகள்:

  "அவர்கள் (சுவனபதியின்) உன்னதமான மாளிகைகளில் நிம்மதியுடன் இருப்பார்கள்'' (34:37)

- சுவர்க்கத்தின் மரம்:

  ''சுவர்க்த்தில் ஒரு மரமிருக்கிறது. அதன் நிழலில் பயணிப்பவர் நூறு வருடங்கள் பயணித்தாலும் அதைக் கடந்து விட முடியாது" (புஹாரி)

- சுவர்க்கத்தின் உணவுகள்:

  "அவர்கள் விரும்பும் கனிகளுடன் அவர்கள் ஆசைப்படும் பறவைகளின் மாமிசத்துடன் (சுற்றி வருவார்கள்.) (56:20,21)

- ஆறுகள்:

  பாலாறு, தேனாறு, மதுவாறு காணப்படுவதாக ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை

- பாத்திரங்கள்:

  "தங்கம், வெள்ளி, பளிங்குப் பாத்திரங்கள், தட்டுகள் மூலமே உணவு, பாணங்கள் பகிரப்படும்." (43:71), (76:15-16)

- ஆடைகள்:

  சுன்துஸ், இஸ்தப்ரக் எனும் இரு வகையான பட்டாடை (45:51-53), (18:31)

- குடும்பத்தினர்:

  ''குடும்பத்தினர் அனைவரும் நல்லவர்களாக இருந்தால் அனைவரும் ஒன்றிணையும் வாய்ப்பை அல்லாஹ் ஏற்பாடு செய்வான்." (51:22)

Department of Examinations - Sri Lanka

- இறை தரிசனம்

  "பூரண இரவில் முழு நிலவைக் காண்பது போன்று உங்கள் இரட்சகனை நிச்சயமாக நீங்கள் காண்பீர்கள்". (புஹாரி)

**(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)**

(iii) **இஸ்லாத்தில் திருமண முன் ஆயத்தம்**

- முன் ஆயத்தம் என்பது திருமணத்தின் முதல் கட்டமாகும்.

**கணவன் மனைவி தெரிவு:**

- கணவனோ மனைவியோ திருமணம் முடிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட அஜ்னபியாக இருக்கின்றாரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல்
- அஜ்னபிகளையும் மஹ்ரமிகளையும் அல்குர்ஆன் விளக்கியுள்ளது. (2:221)
- "பெண் நான்கு காரணங்களுக்காக திருமணம் முடிக்கப்படுகின்றாள். அவை செல்வம், அழகு, குடும்பம், மார்க்க உணர்வு என்பன. மார்க்க உணர்வு கொண்ட பெண்ணையே தெரிவு செய்துகொள். அருள் செய்யப்படுவாய்" (புஹாரி, முஸ்லிம்)
- "குப்பை மேட்டில் வளரும் பசுந்தாவரத்தையிட்டு உங்களை நான் எச்சரிக்கிறேன்" (தாரகுத்னி)

**பெண் பார்த்தல்**

- "உங்களில் யாராவது ஒருவர் ஒரு பெண்ணைத் திருமணம் பேசினால் உங்களைத் திருமணம் முடிக்கத் தூண்டும் பொருட்டு அவளைப் பார்க்கட்டும்' - ஜாபிர் (ரழி)

**மணமகன், மணமகள் விருப்பம் பெறல்:**

- பெண்ணின் அனுமதி பெறல்: ஒரு கன்னிப் பெண் நபியவர்களிடம் வந்து, தனது தந்தை அவரது சகோதரனின் மகனை, தான் விருப்பமில்லாதபோது தனக்கு திருமணம் முடித்து வைத்துள்ளதாக முறையிட்டாள். இறைத்தூதர் (ஸல்) அப்பெண்ணை அவளது தனிப்பட்ட முடிவுக்கு விட்டுவிட்டார்கள். அப்போது, "தந்தை செய்துவைத்ததை ஏற்றுக்கொள்கிறேன். ஆயினும் தந்தையர்களுக்கு இவ்விடயத்தில் எத்தகைய அதிகாரமும் கிடையாது என்பதைப் பெண்களுக்கு உணர்த்தவே நான் விரும்பினேன்" என்றாள். (இப்னு மாஜா)
- கன்னிப் பெண்ணிடம் அனுமதி கோரப்பட வேண்டும். அவள் மௌனமாக இருப்பதே அவளது அனுமதியாகும். (முஸ்லிம்)

Department of Examinations - Sri Lanka

**பொருத்தப்பாட்டை அவதானித்தல் (அல்-குப்உ):**

- இது திருமணம் நிறைவேற அவசியமான நிபந்தனையாக இல்லாவிட்டாலும் திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக நீடிப்பதற்கு ஒரு காரணமாகும்.

- அடிமையாக இருந்து சுதந்திரம் பெற்ற ஸைத் (ரழி) அவர்களுக்குச் சுதந்திர பெண்ணான ஸைனப் (ரழி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் விவாகம் செய்து வைத்தார்கள். இவர்களது வாழ்வில் பிரச்சினை ஏற்பட்டது. மனம் பொருந்திக் கொள்ளாததால் அத்திருமணம் முறிவடைந்தது.

- மார்க்க ஈடுபாடு, வயது, குடும்ப அந்தஸ்து, கல்வி நிலை, கொள்கை, உயரம் போன்ற பல விடயங்களில் பொருத்தப்பாடு அவதானிக்கப்படுவது சிறந்தது.

**(இவை போன்ற ஐந்து ஆதாரங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)**

(iv) **அரேபிய - இலங்கை உறவுகள்**

- இலங்கையின் புவியியல் அமைவிடம் இலங்கை - அரேபிய உறவுகளுக்கு காரணமாக அமைந்தமை.

  (கிழக்கு - மேற்கு கடல் மார்க்க வர்த்தகப் பாதையில் இலங்கை அமைந்திருந்தமை.)

- அறபு வணிகர்களுக்கு அவசியமான வர்த்தகப் பண்டங்கள் இங்கு கிடைத்தமை. பெருமதியான மாணிக்கக் கற்கள், யானைத் தந்தம், ஏலம், கறுவா, கராம்பு, சாதிக்காய் போன்ற வாசனைத் திரவியங்கள் போன்றன கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து மதிப்புப் பெற்று விளங்கியமை.

- நன்னீர் வசதி, கப்பல்களை நிறுத்த - திருத்த - பழுதுபார்க்க போதிய வசதி காணப்பட்டமை.

- அரேபிய இலங்கை உறவுக்கு பருவப்பெயற்சிக் காற்றும் ஒரு காரணமாக அமைந்தது வர்த்தகப் பயணத்தின் போது பருவப் பெயர்ச்சிக் காற்று சாதகமாக அமையும் வரையில் அரேபியர் இலங்கையில் தங்கினர்.

- சுதேசிகள் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபாடு காட்டாமையால் சுதேச மன்னர்கள் அறபு வர்த்தகர்களை ஆதரித்தமை.

- பாவா ஆதம் மலைத் தரிசனத்திற்காக அரேபியர் கிருஸ்துவுக்கு முன்பிருந்தே இலங்கைக்கு வந்து சென்றமை.

- சுதேசிகளின் உபசரிப்பும், வர்த்தகத்துக்காகக் கிடைக்கப் பெற்ற சுமூகமான சூழலும்.

- சுதேசப் பெண்களை மணம் முடித்தமை.

Department of Examinations - Sri Lanka

- அரேபியர்களின் நற்பண்புகள், நேர்மை, நாணயம் என்பவற்றால் ஆதரவு நல்கியமை.

- கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து அரேபியர் இலங்கைக்கு வருகை தந்துள்ளமைக்கு சான்றுகள் காணப்படுகின்றன.

- பண்டுகாபய மன்னன் கி.மு. (437-367) காலப் பகுதியில் அநுராதபுரத் தலைநகரில் "யோனாஸ்"களுக்கு தனிப்பகுதி ஒதுக்கப்பட்டிருந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. அது அரபு வணிகர்களையே குறிக்கிறது - வில்ஹேம் கைகர், ஆனந்த குருகே போன்ற மொழிபெயர்ப்பாளர்களின் கருத்து.

- அநுராதபுரத்தில் அரபுகளின் வீடுகள் அழகிய முறையில் அமைந்திருந்தன (கி.பி. 114 இல் இலங்கையை தரிசித்த சீன தேச சஞ்சாரி பாகியன் (*Fashien*)

- விஜயனும் அவனது தோழர்களும் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே யமன் நாட்டு அரபிகள் இலங்கையில் குடியிருந்துள்ளனர். ஆரியர்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே அரபு வணிகர்களது வருகை இடம்பெற்றது (வில்ஹேம் கைகர்)

- கி.பி. 4ஆம் நூற்றாண்டு இந்தியாவில் காயல்பட்டணம், கீழைக்கரை, கள்ளிக்கோட்டை பகுதிகளில் அரபிகள் செறிவாக வாழ்ந்தனர். இதே காலத்தில் இலங்கையிலும் செறிவாக வாழ்ந்துள்ளனர். - தோமஸ் ஆர்னோல்ட் (*The preaching of Islam*)

- அரபு வர்த்தகர்கள் மலபார் கரையிலும் இலங்கையிலும் அதிகமாக வாழ்ந்து வந்தனர் அங்கு அவர்களின் ஆதிக்கமே மிகைத்திருந்தது. கிறிஸ்தவ ஆண்டு தொடங்கு முன்னரே அரபுகளின் குடியேற்றங்கள் இலங்கையில் அமைந்திருந்தது (எழுத்தாளர் பிளினி)

- கடந்த 2000 வருடங்களுக்கும் மேலாக அரபு மக்கள் இலங்கையின் குடிமக்களாக இருந்து வந்ததால் ஆதிவாசிகளையும் பழங்குடிகளையும் போலவே அவர்களும் பழைமை வாய்ந்தவர்களாவர் (கலாநிதி பாலேந்திரா)

- கி.மு. 3, 4 ஆம் நூற்றாண்டுகளில் அரபு தீபகற்பத்திலிருந்து புறப்பட்ட கப்பல்கள் இலங்கையில் தரித்துச் சென்றன. – சிரமா கிரிபமுனே.

- "தெதுரு ஓயா, சோணா நதி அல்லது அறேபியரின் நதி என்று கூறப்பட்டது. தெதுரு ஓயாவுக்கு வடபாகத்தில் சோணாள் அல்லது அரேபியப் பழங்குடிகள் வாழ்ந்துள்ளனர். சோணா நதி என்பதன் பொருள் சோனகர் நதியாகும்" - ***J.R.*** சின்னத்தம்பி எனும் வரலாற்றாய்வாளர் '*Ceylon in ptomay's Geography*' எனும் நூலில்.

- இவையனைத்தும் இஸ்லாம் அரபுலகில் அறிமுகமாவதற்கு முன்பிருந்து இன்று வரை அறேபியர் இலங்கையோடு தொடர்புற்றிருந்தனர் என்பதையும், இங்கு குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்துள்ளனர் என்பதையும் காட்டுகின்றன.

**(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 x 5 = 5 புள்ளிகள்)**



Department of Examinations - Sri Lanka